பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 27 புதன்கிழமை (13-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:351

# மாவீரர்நாளை உணர்வோடு கொண்டாட தயாராகுங்கள்!

## குடாநாட்டு மக்களுக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

தமிழர் தாயகத்தின் தேசிய நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள மாவீரர் நாளை, உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடிப்பதற்கு குடாநாட்டு மக்களைத் தயாராகுமாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாவீரர் நாளை எதிர்கொள்வது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் விளக்கமளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தேச விடுதலைக்காக தமது உயிரைத் தற்கொடையாக ஈந்து - மண்ணுக்கு உரமாகி - எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களின் நினைவு நாளே மாவீரர் நாள். தமிழ் மக்களின் கௌரவத்தை வெளிக் கொணரும் புனித நாள். இதுவரை 17 ஆயிரத்து 651 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

சுமார் 7 வருடங்களின் பின்னர், யாழ்.குடாநாட்டு மக்கள் தமது மன உணர்வுகளை சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது தமது உள்ளத்தினுள்ளே - இல்லத்தினுள்ளே - மாவீரர்களை பூட்டி வைத்துப் பூசித்து வந்த யாழ். குடாநாட்டு மக்களுக்கு, இன்று அந்த அபூர்வமான மனிதப் பிறவிகளை - விடுதலை வீரர்களை - நினைவு கூருவதற்கு ஏற்ற சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அந்தச் சுதந்திரச் சிற்பிகளின் அர்ப்பணிப்பாலும் வலிமையாலும் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சூழலில், மாவீரர் துயிலும் இல்லங்களில் மட்டுமன்றி யாழ். குடாநாடெங்கும் மாவீரர்நாள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

**மக்களின் நிதியுதவி**

மாவீரர் துயிலும் இல்லப் புனரமைப்புக்கென முதன் முதலில் எமக்கு நிதியுதவி செய்து, அப்பணியை உடன

(14ஆம் பக்கம் பார்க்க)

## நல்லாட்சி, இன நல்லிணக்கம், சமாதானத்துக்காக

# இரு குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ஆலோசனை

## புலிகளுக்கும் இடம்

கொழும்பு,நவம்பர்13

**தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு விடயங்களுக்காக இரண்டு முக்கிய குழுக்களை அமைக்கும் யோசனையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டிருக்கின்றார்.**

**ஒன்று - நல்லாட்சி நடைமுறைகளை வகுப்பதற்கு பிரதமர் தலைமையில் தேசியக்குழு.**

**மற்றது - இன நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்துக்கான விடயங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கிய தேசியக்குழு.**

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை ஒட்டி நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த உரையில் நான்கு அடிப்படை அம்சங்களை அவர் வலியுறுத்தினார்:

★ நாட்டை மீள் ஜனநாயகப் படுத்தி, மீள் மனிதத்துவப்படுத்துவதற்கான நடவடிக்கைகள். இதற்காக நல்லாட்சி முறை பற்றிய விடயங்களைப் பரிசீலிப்பதற்கான தேசியக்குழு ஒன்றை அமைத்தல்.

★ பொருளாதார, அபிவிருத்தி விட

(13ஆம் பக்கம் பார்க்க)

## கொரியக் கப்பல் எரிகின்றது!

கொழும்பு,நவ.13

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பு எல்லையில் கப்பலொன்று வெடித்துச் சிதறி எரிந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

கொரிய நாட்டுக்குச் சொந்தமான இந்தக் கப்பலில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தினால் அது எரிய நேரிட்டுள்ளது.

அக்கப்பல் வெடித்துச் சிதறி எரிந்து கொண்டிருப்பதாக கொழும்பு துறைமுக வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்துள்ளன. (ஐ-12)

## விமல் வீரவன்ஸவின் அறிக்கையால்

# நாடாளுமன்றத்தில் நேற்று அமளி துமளி!

## அமைச்சர் மகேஸ்வரன் வெளியேற்றப்பட்டார்

சபை நடவடிக்கைகளில் தொடர்ந்தும் குறுக்கீடு செய்த ஆளும் கட்சி உறுப்பினரான அமைச்சர் மகேஸ்வரனையும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோலித்த பிறேமரத்னவையும் சபையைவிட்டு வெளியேறுமாறு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுக் காலை உத்தரவிட்டார். அவர்கள் உடனே வெளியேறாததைத் தொடர்ந்து சபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. பார்வையாளர் கலரியில் இருந்த மாணவர்களும் அச்சமயம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. வழமையான அலுவல்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயங்களினுள் 30 ஆயிரம் வீடுகள் முடக்கம்

### புள்ளிவிவரங்கள் மூலம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 29 ஆயிரத்து 525 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 300 பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு இடங்களுக்கு பொது மக்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. இருபத்தைந்திற்கும் அதிகமான முக்கிய வீதிகளைப் பொதுமக்கள் பயன்படுத்தமுடியாதுள்ளது.

யாழ்மாவட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக திரட்டப்பட்ட புள்ளி விபரத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து

# கிளிநொச்சியில் நேற்று பேரணி!

## மாணவர்கள், பொதுமக்கள் திரண்டனர்

கிளிநொச்சி,நவ.13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேபிரபாகரனுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றம் விதித்த தீர்ப்பை ஆட்சேபித்து நேற்று கிளிநொச்சி நகரில் ஆயிரக்கணக்கானோர் பேரணி நடத்தினர்.

கிளிநொச்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி முற்பகல் 10 மணியளவில் கந்தசுவாமி கோவில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகியது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் தலைவர் பிரபாகரனின் படங்களை சுமந்தபடி பேரணியாகச் சென்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலக வைபவத்தில் பிரதமர் கலந்துகொள்ளவில்லை

### ஐ.தே.க., ஜே.வி.பி., மு.கா. எம்.பிக்களும் வரவில்லை

கொழும்பு,நவ.13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று எட்டு ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டி நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கோலாகலமாக நடைபெற்ற கொண்டாட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றவில்லை.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. காலை 9.35 மணிக்கு மோட்டார் சைக்கிள் பொலீஸார், குதிரைப்படை வீரர்கள் முன்னே அணிவகுத்துவர ஜனாதிபதி செயலக வளவுக்குப் பவனியாக வந்தார். செயலாளரினால் வரவேற்று அழைத்துவரப்பட்ட ஜனாதிபதி, மங்கள பேரிகை முழங்க தேசியக் கொடியை ஏற்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகள் - கடற்படையினர் முகமாலையில் இன்று சந்திப்பு!

ஸ்ரீலங்கா கடற்படையின் உயர் அதிகாரிகளுக்கும் கடற்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முகமாலை சூனியப்பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.

வடபிராந்திய கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, கிழக்கு கட்டளை அதிகாரி சரத் ரத்னகீர்த்தி ஆகியோர் கடற்படையினர் தரப்பிலும் - புலிகளின் தரப்பில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை உட்பட மற்றும் தளபதிகளும் பங்குபற்றுவர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொண்ட புருஹோவிட் முன்னிலையில் இச் சந்திப்பு இடம்பெறும். மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, கடற்போக்குவரத்துப் பிரச்சினை உட்பட பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவிருக்கின்றன. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய விரும்பிய சிறுவர்கள் ஐவரையே படத்தில் காண்கிறீர்கள். இவர்களை விடுதலைப் புலிகள் நேற்று அவர்களது பெற்றோர்களிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படம்: ரமணன்)



சிறுவர்களை ஒப்படைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட கண்காணிப்புக் குழு மற்றும் ஐ.நா. பிரதிநிதிகள்.

# அன்வர் இஸ்மாயில், ஹரிஸ் எம்.பிக்களுக்கு பிரதமர் ஹெலி அனுப்பி விசேட அழைப்பு!

## மக்கள் கலவரமடைந்து ஒரே குழப்பம்!

அம்பாறை,நவ.13

நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களில் இருவரான அன்வர் இஸ்மாயிலுக்கும் ஹரிஸுக்கும் ஹெலிகொபடர் ஒன்றை கல்முனைக்கும் சம்மாந்துறைக்கும் அனுப்பி அதில் ஏறி உடனே கொழும்புக்கு வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று விசேட அழைப்பு விடுத்திருந்தார்.

தங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய எம்.பிக்களை ஏற்றிச் செல்ல ஹெலி வந்திருந்ததைக் கண்டதும் மக்கள் கிலி கொண்டனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஹெலியில் சென்றபோதுதான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் பலியானார். அவரது மரணத்தின் மர்மம் இன்னும் துலக்கப்படவில்லை.

ஆகவே, மக்கள் ஹெலியை மொய்த்துக் கொண்டு "கறுப்புப் பெட்டி இருக்கிறதா? வேறு என்ன உள்ளே இருக்கிறது? நாங்கள் சோதனையிட வேண்டும்" என்றவாறாகக் கூறிக்கொதித்தனர். பலர் ஹெலிக்குள் ஏறத் தயாராகி விட்டனர். ஹெலி தொடர்ந்து அங்கே தரித்து நின்றால் ஆபத்து நேரலாம் என்ற அச்சம் ஏற்படவே ஹெலி கிளம்பி அம்பாறை சென்றுவிட்டது.

பிரதமர் அனுப்பிய ஹெலி நேற்று காலை 9.15 மணியளவில் கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் இறங்கி ஹரிஸ் எம்.பியை ஏற்றிக் கொண்டு அன்வர் இஸ்மாயில் எம்பியை ஏற்றுவதற்காக சம்மாந்துறை சென்றது; முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் இறங்கியது. அப்போது அன்வர் இஸ்மாயிலை அழைத்து வருவதற்கு ஹரிஸ் எம்.பி. இறங்கிச் சென்றுவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்திலேயே மக்கள் அச்சமும் சந்தேகமும் கொண்டு நடந்துகொண்ட விதத்தால் ஹெலி அங்கிருந்து திடீரென்று கிளம்பி அம்பாறை சென்றது.

அம்பாறையிலிருந்து விடயம் பிரதமருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் தொடர்பு கொண்டு நிலைமையைச் சீராக்கி எப்படியும் இரு எம்.பிக்களையும் உடனே கொழும்புக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யும்படி பணித்தார்.

ஒஸ்ரின் பெர்னாண்டோ வேறு வழி தெரியாமல் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தயவை நாடினார்.

ரவூப் ஹக்கீம் உடனே அன்வர் இஸ்மாயில், ஹரிஸ் ஆகிய இரு எம்.பிக்களுடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களை பிரதமரின் அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து எப்படியும் கொழும்புக்கு வந்து சேருமாறு வேண்டுகோள் விடுத்தார். தங்கள் கட்சித் தலைவரின் வேண்டுகோளுக்கு இருவரும் இணங்கினர்.

அம்பாறையிலிருந்து ஹெலி மீண்டும் சம்மாந்துறை சென்றது. இம்முறை வேறு ஓர் இடத்தில், அதாவது தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் நடுப்பகல் 12.30 மணிக்கு ஹெலி இறங்கியது.

பொலீஸ் மற்றும் ஊர்காவல் படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும் அங்கேயும் மக்கள் திரளத் தொடங்கினர். அவர்களை ஹெலிக்கு அருகே செல்லவிடாமல் ஊர்காவல் படையினர் தடுக்க முனைந்தபோது அவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

அதற்கிடையில் அவசர அவசரமாக எம்.பிக்கள் இருவரும் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் ஹெலியில் ஏறியதும் அது 12.50 மணிக்கு கொழும்பு நோக்கிக் கிளம்பியது.

பிரதமருடன் பேச்சு நடத்தப் போகிறோம். அமைதியாக இருங்கள் என்று கூடி நின்ற மக்களுக்கு எம்.பிக்கள் இருவரும் வேண்டுகோள் விடுத்தனர். (ஐ)

இயக்கத்தில் சேர வந்த

# 5 சிறுவர்கள் பெற்றோரிடம்!

யாழ்ப்பாணம்,நவ.13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த ஐந்து சிறுவர்கள் அவர்களது பெற்றோர்களிடம ஒப்படைக்கப்பட்டனர். சிறுவர்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று மாலை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 16 வயதான ஐந்து மாணவர்கள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஐநா.சபையின் யாழ். அலுவலகப் பிரதிநிதி அக்ரன்ட்ரகை (Agron Dragai), யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகப் பணிப்பாளர் பிய (Per) ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-9)

# கல்வியிலும் இயல்பு வாழ்க்கையிலும் இராணுவ அழுத்தம் தொடர்கிறது!

## சிறுவர்களை ஒப்படைக்கும் நிகழ்வில் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,நவ.13

யுத்த நிறுத்தம் நடைமுறையில் உள்ள இக்காலப்பகுதியிலும் மாணவர்களின் கல்வி மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் இராணுவ அழுத்தங்கள் தொடர்ந்து கொண்டிருப்பதனையே எமது இயக்கத்தில் இணையவரும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை எடுத்துக்காட்டுகிறது.

- இவ்வாறு, புலிகள் இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சிறுவர்களை புலிகள் அமைப்பில் இணைத்துக்கொள்ள வேண்டாமென எமது தேசியத் தலைவர் எமக்குக் கண்டிப்பான கட்டளையை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் சுயவிருப்புடன் எமது இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்களை, அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைத்து வருகிறோம். சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு வருகிறோம் - என்றார்.



'புலிகள் அமைப்பில் சிறுவர்கள் இணைக்கப்பட்டுவருவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த வகையில் யாராயினும் ஒரு சிறுவன் புலிகள் இயக்கத்தில் இணைந்திருப்பது உறுதி செய்யப்படின் அச்சிறுவனை விடுவிக்க புலிகள் இயக்கம் தயாரா? - என்று ஐ.நா. சபையின் பிரதிநிதி அக்ரன் ட்ரகை (Agron Dragai) வினா எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து இளம்பரிதி கூறியதாவது -

எமது விடுதலை இயக்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவானவை. சிறுவர் விவகாரங்களைப் பொறுத்தவரையிலும் சர்வதேச நடைமுறைகளுக்கு எமது இயக்கம் மிகுந்த மதிப்பளிக்கிறது. அந்த வகையில் சர்வதேச நிறுவனங்கள் சுட்டிக்காட்டும் விடயங்கள் தொடர்பாக நாம் நிச்சயம் கவனமெடுப்போம் - என்றார். (ஐ-9-173)

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் நேற்று கட்டுகஸ்தோட்டைக்கு!

யாழ்ப்பாணம்,நவ.13

அனலைதீவில் மரணமான ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் அவரது சொந்தஊரான கடுகஸ்தோட்டைக்கு நேற்று எடுத்துச்செல்லப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்த இறந்தவரின் சடலத்தை நேற்றுப் பிற்பகல் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பொறுப்பேற்றனர். பின்னர் யாழ் நகரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் சடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பிற்பகல் 5.00 மணியளவில் விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு வைத்து ஈ.பி.டி.பியினரால் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்குமுன்னர் ஈ.பி.டி.பியின் கொழும்பு தலைமையகத்திலும் சடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது என்றும் -

செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலர் சடலத்துக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-173)

# பிரபாகரன் மீதான தீர்ப்பை ஆட்சேபித்து கல்முனையில் கண்டனக் கூட்டம்

## பிரதேச செயலகத்துக்கு ஆர்ப்பாட்டப் பேரணி

பாண்டிருப்பு,நவ.13

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து நேற்று கல்முனையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டப் பேரணி என்பன இடம் பெற்றன.

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள தமிழ்க் கிராமங்களான பாண்டிருப்பு, கல்முனை, நற்பிட்டிமுனை, மணற்சேனை, சேனைக்குடியிருப்பு, பெரிய நீலாவணை, துறைவந்தியமேடு ஆகியவற்றில் இருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள்; ஆசிரியர்கள் ஆகியோர் இவற்றில் பங்குபற்றினர்.

பெரிய நீலாவணை, சேனைக் குடியிருப்பு, கல்முனை போன்ற இடங்களில் இருந்து ஆரம்பமான பேரணி பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன ஆலய முன்றிலை வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகளில் ஒருவரான எஸ்துஷயந்தன் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கல்முனைப் பிரதேச மகளிர் அமைப்புத் தலைவி திருமதி யோகா கனகசபை, அகில இலங்கை பொது ஊழியர் முன்னணித் தலைவர் எஸ்.லோகநாதன், எஸ்.சதாசிவம ஜே.பி. உட்பட பலர் உரையாற்றினர். இதனையடுத்து பேரணி பாண்டிருப்பில் இருந்து கல்முனை நோக்கி ஆரம்பமானது. பேரணியில் பங்குபற்றியோர் சுலோகங்களைக் கோஷித்தனர்.

★ ஜே.வி.பியே! சமாதானத்தைக கெடுக்காதே! கெடுக்காதே!

★ பொய்யான வழக்கிற்கு மெய்யான தீர்ப்பா?

★ ஜனாதிபதியே! ரணிலின், சமாதான முயற்சியைக் குழப்பாதே!

★ தமிழ் எங்கள் மூச்சு! பிரபாகரன் எங்கள் உயிர்!

- என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்புவதற்காக மகஜரை கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் வி.அழகரெத்தினத்திடம் கையளித்த பின்னர் பேரணியினர்

# மன்னாரிலும் பேரணி; ஊர்வலம்

மன்னார்,நவ.13

தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட 200 வருட சிறைத்தண்டனையை எதிர்த்து நேற்று மன்னாரில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மாபெரும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் காலை 10 மணிக்கு இப்பேரணி ஆரம்பமானது. மதத்தலைவர்கள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் போக்குவரத்துச்சங்க உறுப்பினர்கள், பல்வேறு பொது அமைப்பினர் உட்பட 5000 பேர் பேரணியில் கலந்துகொண்டனர். பேரணி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். பொறுப்பாளர் குமரேஸ், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் சேவியர் குருஸ் ஆகியோர் தலைவர் பிரபாகரனுக்கு விதித்த தண்டனை பற்றியும் அது தற்போதைய சமாதான சூழலைப் பாதிப்பது பற்றியும் உரையாற்றினர்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் பேசுகையில், தமிழருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தை அரசு வாபஸ் பெறவேண்டும்; பிரபாகரன் மீதான வழக்கு வாபஸ் பெறவேண்டும் என்றார்.

இந்து ஆலயக் குருக்கள் மனோகர சர்மா அரச தலைவர்களுக்கான மகஜரை அரச அதிபரிடம் கையளித்தார். அதைப்பெற்ற அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் மக்களின் மன உளைச்சலையும் விழிப்புணர்ச்சியையும் நான் உணர்கிறேன். இந்த மகஜரை உடனடியாக உரிய இடத்தில் சேர்ப்பிப்பேன் என்று கூறினார்.

பேரணியில் கலந்துகொண்டோர் "குலைக்காதே குலைக்காதே சமாதானத்தை!, பொய்யான வழக்குக்கு மெய்யான தண்டனையா?, ஈழத்தலைவருக்கு சிங்களத்தலைவர் தண்டனையா?" போன்ற கோஷங்களை எழுப்பினர். இச்சுலோகங்கள் தாங்கிய அட்டைகளையும் ஏந்திச் சென்றனர்.

இப்பேரணியை முன்னிட்டு கடைகள் பூட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை. அரச, தனியார் நிறுவனங்கள் இயங்கவில்லை. (ஐ-9)

# ரோபோ நாய்

மேற்குலக நாடுகளில் உயிருள்ள செல்லப்பிராணிகளுக்குப் பதில் மின்னியல் செல்லப் பிராணிகளை வளர்ப்பதில் (பராமரிப்பதில்) தற்போது ஆர்வம் காட்டப்படுகின்றது. இந்தவகையில் ரோபோ நாய்களுக்கு ஏகப்பட்ட மவுசு.

இதனால்,



'அய்போ' ரக ரோபோ நாய்கள் விற்பனைக்கு வந்து அமோகமாக விற்பனையாகின. தற்போது அவற்றின் அடுத்த தலைமுறையும் வந்துவிட்டது. இவற்றுக்கு 'பன்றையு(Banryu) என்று பெயரிடப்பட்டுள்ளது. ஜப்பானிய மொழியில் இதற்கு 'ட்ரகன்' கடவுள் என்று அர்த்தம்.

ரோபோ உற்பத்தியில் முன்னணி வகிக்கும் சன்யோ நிறுவனமும் மற்றுமோர் நிறுவனமும் இணைந்து இந்த நாய்களைத் தயாரித்துள்ளன.

இந்த நாய்கள் ஒரு நிமிடத்தில் 15 மீற்றர் தூரம் நகரும் திறன் வாய்ந்தவை. நீங்கள் வீட்டில் இல்லாதபோது வீட்டுக்கு வருபவர்களை புகைப்படம் எடுத்து உங்களது செல்லிடப்பேசிகளுக்கு அனுப்பி வைக்குமளவுக்கு அறிவுபடைத்தவை இவை. வீட்டில் எங்காவது தீ பற்றிக்கொண்டால் அதனைக் கண்டுபிடித்து அறியத்தரும்... அத்துடன் வீட்டிற்கு யாராவது சந்தேகத்துக்கிடமானவர்கள் வந்தால், ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுள்ள தனது பதிவுகளுடன் அலசி ஆராய்ந்த பின்னர் அவர் சந்தேகத்துக்கிடமானவர் என்று உறுதிப்படுத்திக் கொண்டால் தனது எஜமானர்களை எச்சரிக்கும் வகையில் - குரைக்கக்கூடிய வகையில்-இந்த நாய்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# நவீன பாதுகாப்பு கருவி



தொழிற்சாலைகள் மற்றும் பெரிய நிறுவனங்களில் பாதுகாப்பு பணிகளுக்கு கணனி கருவிகளைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. குறிப்பாக பாதுகாப்பு நிறைந்த இடங்களில் ஊழியர்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் போலி நபர்கள் நுழைந்துவிடாமல் தடுக்கவும் கணனிக் கருவிகள் மூலம் கண்காணிக்கப்படும் அடையாள அட்டை முறை உபயோகத்தில் உள்ளது.

அதாவது ஊழியர்களின் அடையாள அட்டைகளை கணனிகளே சரி பார்த்து அவர்களை அனுமதிக்கும். இதிலும் தில்லுமுல்லுகள் நடக்கும் வாய்ப்பு அதிகரித்ததாலே கைரேகைமூலம் கண்காணிக்கும் முறை கொண்டுவரப்பட்டது. இதன்படி ஊழியர்கள் தங்களின் பெருவிரல் கைரேகையை கணனியில் பதிவுசெய்த பின்னரே அனுமதி பெறமுடியும். இந்த முறையிலும் ஏமாற்று வேலைகள் நடக்கத் தொடங்கின.

இதையடுத்து புதிய கணனி கண்காணிப்புக் கருவி ஒன்றை ஜப்பான் நாட்டின் என்.இ.சி. நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. இதற்கு 'நியோ பேஸ்' என்று பெயரிட்டுள்ளனர்.

தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களின் நுழைவு வாசலில் இந்தக் கணனிக் கருவியைப் பொருத்தவேண்டும். வேலைக்கு வரும் ஊழியர்கள் இதன் அருகே போய் நின்றதும், இதிலுள்ள கமரா அவர்களது முகத்தைப் படம் எடுத்து கணனிக்கு அனுப்பும். அங்கு ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ள ஊழியர்களின் புகைப்படங்களுடன் இதை கணனி ஒப்பிட்டுப் பார்க்கும். வந்திருப்பவர் தனது நிறுவன ஊழியர்தான் என்பது உறுதியான பின்னரே அவருக்கு உள்ளே நுழைய அனுமதி கிடைக்கும் இந்த 'நியோ பேஸ்' கருவியின் விலை சுமார் 16 லட்ச ரூபா.

தயாரிப்பு :
கனிமொழி

# அட! அப்படியா!!

## ரூ.40 கோடி நகைகள்



படத்தில் காணும் அழகி அணிந்திருக்கும் தோடு, நெக்லஸ், பிரஸ்லெட் ஆகிய நகைகளின் மொத்த மதிப்பு என்னவென்று தெரியுமா? சுமார் 40 கோடி ரூபாய் (அடேயப்பா.....) அனைத்தும் பிளாட்டினம், வைரம், பவளங்கள் கொண்டு உருவாக்கப்பட்ட நகைகள்.

உக்ரைன் நாட்டில் நடந்த நகைக் கண்காட்சி ஒன்றில் மொடல் அழகிகள் விதவித புதிய பாணி நகைகளை அணிந்துகொண்டு ஒய்யாரம் காட்டினர். இந்தக் கண்காட்சியில் 36 நாடுகளைச் சேர்ந்த 500 நகை வியாபாரிகள் கலந்துகொண்டு தங்களது தயாரிப்புக்களை இடம் பெறச் செய்தனர்.

அதிலேயே இந்த அழகியும் இருந்தார். இதில் கூடுதல் தகவல் என்னவென்றால் இவர் இலங்கையைச் சேர்ந்த மொடல் அழகி ஜாக்குலின் என்பதுதான்.

## தாண்டல்

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் 3ஆவது உலக இளைஞர் மாநாடு அண்மையில் நடந்தது. 20 நாடுகளைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் பெண்களும் இளைஞர்களும் கலந்துகொண்டனர்.



ஒவ்வொரு நாட்டு இளைஞர்களும் பல்வேறு சாதனைகளையும் கலை நிகழ்வுகளையும் நிகழ்த்திக்காட்டி தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் தென்கொரியா மாணவர்கள் வித்தியாசமான சாகசம் ஒன்றைச் செய்துகாட்டினார்கள்.

மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து காற்றில் எம்பி குறிப்பிட்ட தூரத்தை தரையில் தொடாமலேயே தாண்டுவதுபோன்று சைக்கிளில் வேகமாக வந்து தரையில் படுத்துக்கிடந்த 8 இளைஞர்களைத் தாண்டி. இந்த சாகச நிகழ்ச்சியைச் செய்து காட்டினார் தென்கொரிய மாணவர் ஒருவர். அதையே படத்தில் காண்கிறீர்கள்.

# புதிதாய் வந்திருக்கும் 'ரப்லெற்'

இதைக் கற்பனை செய்து பாருங்கள்...........

(காலம் இன்னும் சில ஆண்டுகள் பின்பாக இருக்கலாம்)

யாழ்.ஆஸ்பத்திரி முன்பாக நடைபாதையில் நீங்கள் நடந்து சென்றுகொண்டிருக்கின்றீர்கள். உங்கள் கையில் பழையகால சிலேட்டை ஒத்த குறிப்புப் புத்தகம் அளவிலான மின்னியல் பொருள் ஒன்று உள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள பேனா ஒன்றினால் நீங்கள் உங்கள் காதலிக்கு அவசர அவசரமாக ஒரு ஈ-மெயில் 'எழுதி' அனுப்புகின்றீர்கள். என்ன ஆச்சரியம் நீங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த ஐந்தாவது நிமிடத்தில் உங்களுக்கு உங்கள் காதலியிடம் இருந்து மோசமான திட்டல்களுடன் ஒரு பதில் ஈ-மெயிலில் வருகின்றது. (அதில் உள்ளது என்ன வென்று வெளியே தெரிய வேண்டாமே) அதிலிருந்த திட்டுக்கள் தந்த திகைப்பில் எதிரே வந்த பெண் மீது நீங்கள் மோதிக்கொள்கிறீர்கள்...

நான் சொல்லாமலேயே, அந்த மோதலின் வேகத்தில் நீங்கள் கற்பனையிலிருந்து விழித்துக்கொண்டிருப்பீர்களே!

நல்லது!

இப்போது நிஜ உலகத்துக்கு வாருங்கள்!

நாங்கள் வாழ்ந்துகொண்டிருப்பது 21ஆம் நூற்றாண்டின் தகவல் தொழில்நுட்பயுகத்தில். தனித் தனிப் பாதைகளில் சென்றுகொண்டிருந்த விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் கைகோர்த்து செல்லும் காலம் இது. இங்கே அதிவேகமான தகவல் பரிமாற்றம் மனிதர்களின் வாழ்க்கை முறையையே மாற்றியமைக்கின்றது. நாளாந்தம் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய பொருள்கள் அறிமுகமாகின்றன. எவையும் நிரந்தரமாயில்லை. '...பெயா ரெவீர்' விளம்பரம் சொல்வதுபோன்று 'மாற்றமுடியாதது எதுவுமே இல்லை' என்றாகிவிட்டது.

இந்த தகவல் தொழில்நுட்பயுகத்தில் மிக முக்கிய பாவனைப் பொருளான கணனியின் நிலையும் அதுதான். அடிக்கடி புதிய புதிய கணனிகள் அறிமுகமாகின்றன. அந்த வகையில் இப்போது அறிமுகமாகியுள்ளதுதான் 'ரப்லெற்' (Tablet) என்ற புதிய கணனி.

பொதுவான பார்வைக்கு லப்ரொப் (Laptop) கணனியைப் போன்று இருக்கும் இது, புதிய பல வசதிகளையும் தொழில்நுட்பத்தையும் கொண்டது.

பலவருட முயற்சிகள், முன்னேற்ற ஆய்வுகளின் பின்னர் கணனி உற்பத்தி நிறுவனங்கள் இந்த 'ரப்லெற்' கணனியை உருவாக்கியுள்ளன. சாதாரணமாக குறிப்புப் புத்தகம் (Note book) வடிவத்தில் இருக்கின்றது இது. தட்டையானது; 8 1/2 X 11 அளவுள்ளது. (ஒரு A4 தாள் அளவானது)

**பிரேம்**

இதில் உள்ள விசேட அம்சம் என்னவென்றால் இந்தக் கணனியைச் செயற்படுத்துவதற்கு வழமையான விசைப்பலகை (Key board), மௌஸ் (Mouse) ஆகியவை தேவையில்லை. அதற்குப் பதிலாக ஒரு 'பென்'(Pen) மட்டும் போதுமானது. இதற்கெனவே வடிவமைக்கப்பட்ட அந்தப் பேனா கணனியை முழுமையாகக் கட்டுப்படுத்தும்.



அந்தப் பேனா (Pen - Writing machine) மூலம் 'ரப்லெற்' கணனியின் திரையில் நாம் விரும்பியவாறு எழுதலாம். அதாவது சாதாரணமாக அப்பியாசக் கொப்பிகளில் நாம் எவ்வாறு எழுதுகின்றோமோ அவ்வாறே கணனியின் திரையிலும் எழுதலாம். அதனைப் புரிந்துகொண்டு செயலாற்றும் திறன் இந்த 'ரப்லெற்' கணனிகளுக்கு இருக்கின்றது.

மனிதர்களின் கையெழுத்துக்களை அங்கீகரிக்கும் (Recognition) அறிவை கணனிகளுக்கு வழங்கும் ஆய்வுகளில் ஏற்பட்ட வெற்றியே இதனைச் சாதித்துள்ளது.

இதற்கான ஆய்வுகள் 90களிலேயே ஆரம்பித்தன. எனினும் அவை வெற்றி பெறவில்லை. கையெழுத்துக்களை கணனிக்கு புரியவைப்பதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இதற்கான முயற்சிகள் பலமுறை தோல்வியடைந்தன. இதனால் இந்த முயற்சியில் ஈடுபட்ட சில நிறுவனங்கள் அந்த முயற்சியைக் கைவிட்டன. ஆனால் அந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்ட நிறுவனங்கள் இறுதியில் இப்போது தமது முயற்சியில் வெற்றி பெற்றுள்ளன. அதன் பெறுபேறே 'ரப்லெற்' கணனி.

கையெழுத்துக்களைப் புரிந்து கொள்ளும் திறனை ஒரே பக்கேஜ்ஜுக்குள் (Packeg) அடக்குவதில் மென்பொருள் நிறுவனங்கள் இறுதியில் வெற்றியைப் பெற்றுள்ளன. கணனி வரலாற்றில் இது ஒரு மைல்கல் என்று வர்ணிக்கப்படுகின்றது.



புதிய 'ரப்லெற்' கணனியில் இரு வகையானவை உண்டு.

ஒன்று சாதாரணமாக லப்ரொப் கணனியைப் போன்றது. ஆனால் அதன் திரை (Screen) வட்டமாகச் சுழலும் தன்மை கொண்டது அத்துடன் தட்டுவதன் மூலம் தன்மையும் உடையது.

மற்றையது சாதாரண லப்டப்பை விட சற்று வித்தியாசமானது. எடுப்பான திரையைக் கொண்டது. உட்செலுத்தலுக்கு (Input) விசைப் பலகையையும் அடித்தளமாகக் கொண்டு செயற்படுவது.

இரண்டிலுமே பேனா (Writing machine) மூலம் தேவையானவற்றை சாதாரணமாகவே எழுதிக்கொள்ளலாம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன கறணப் புறாக்கள், குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 93, கோவில் வீதி (கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில்). பார்வையிடும் நேரம்: காலை 9.30 - 1.00 மணி வரையும், மாலை 5.00 மணிக்குப் பின்பும். (10464)

கலர் மீன்கள், பல இனக் குருவிகள், மீன்தொட்டிகள், அதற்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (10511)

NEC VERSA WINDOWS 98லப்டொப் கொம்பியூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.171, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (10528)

SONY 2197, 2135 T.Vக்களும் FIAT - 1100 ரக 3 ஸ்ரீ ஐத் தொடர் இலக்கமாகக் கொண்ட காரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.S. மகேஸ்வரன் (பாஸ்கரன் பூங்கா முன்பாக), கே.கே.எஸ். வீதி, மல்லாகம். (10520)

மூன்று கதவுகளுடன் கூடிய அலுமாரி, றேடியோ, கமெரா என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.செ.சத்தியகுமாரன், 133, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10560)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சில்லறை விலை 1kg 120/-. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: உதயன், சங்குவேலி வடக்கு, மானிப்பாய். (10497)

## ஓட்டோ விற்பனைக்கு

ஒருவரின் பாவனையிலிருந்த 202ஜ தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.15, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி (நீராவியடி), யாழ்ப்பாணம். (10550)

## மணமகள் தேவை

பூரம், 2ஆம் பாதம், 1962இல் பிறந்த, 4இல் செவ்வாயுள்ள, 5அடி உயரமுள்ள டாக்டருக்கும், ரேவதி நட்சத்திரமும், தாரம் இழந்த, 1964இல பிறந்த மணமகனுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: கு.அருந்ததி, No.9, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர். (10517)

## கடை தேவை

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில் ஒருகடை தேவை. வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ இருப்பின் தொடர்புகொள்ளவும். கேதீஸ். T.P. 222 2901. (10548)

## தேவை

கொழும்பில் வேலை செய்யும் யாழ்.Doctor வீட்டில் தங்கியிருந்து சிறுபிள்ளை ஒருவரை பார்த்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கக் கூடிய தகுந்தபெண் (வயது 45-55) ஒருவர் தேவை. கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும். சபா.தியாகராசா, 271/1, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, T.P. 360257 (சி-24843)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் அற்புத மருந்தியலில் தீராத நோய் தீர்த்தல், அதிர்ஷ்ட பலன் பெறல் சனி, ஞாயிறு 9.00-12.00. தொடர்பு: ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (10522)

## வகுப்புகள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை ஆங்கிலத்தில் கதைக்க, இலக்கணம், கடிதம் கற்றுக்கொள்ள: விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/Cer in Science (City of Westminister University London), 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (10492)

## திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலக்ரோனிக பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு. தொடர்பு: சு.நாராயணசாமி, இல.301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (10453)

## திருத்துதல்

சகலவிதமான கணனிகளும் பழுது பார்த்துக் கொடுக்கப்படுவதுடன் மேலதிகமான Hardware பாகங்களும் பொருத்தப்பட்டு Instolation செய்தும் கொடுக்கப்படும். நீங்கள் குறிப்பிடும் இடத்திற்கு வந்து பழுதுபார்த்தும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: ஸ்ரீராம் ஒவ்(F) செற் பிரின்ரேர்ஸ், 250, பலாலி வீதி, கந்தர்மடம். தொலைபேசி இல. 222 2215 (10527)

## தவறிவிட்டது

அல்வாய் மேற்கைச் சேர்ந்த சிவராசா சுசிதரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 831373385V), விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன 03-11-2002 இல் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து உதவவும். (10531)

க.ஐ.சிவலிங்கம் என்பவருடைய தே.அ.அ. (இல.470633484V), விசேட அடையாள அட்டை, தொழில்சார் அடையாள அட்டை ஆகியன சிவப்புக் கவருடன் கடந்த 09-11-2002 அன்று வடமராட்சி, தும்பளை, நெல்லியடிக்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தேசிய அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது அச்சுவேலி அரசினா வைத்தியசாலையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10524)

ரெசொன் கைத்தொலைபேசி பரமேஸ்வராச் சந்திக்கும் பொற்பதி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 43/1, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10559)

## வாடகைக்கு வீடு

சகல வசதிகளுடன் கூடிய 10 அறைகள் கொண்ட வாகனத்தரிப்பிடமுடைய வீடு வாடகைக்கு உண்டு. மாணவர்கள் படிக்கும் இடமாகவும் அலுவலகமாகவும் பயன்படுத்தலாம். தொடர்பு: அ.செ.சத்தியகுமாரன், 133, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (10861)

## கோழிநோய் தடுப்பு மருந்து

Gampura, Raniket மருந்துகள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணிக்கும் CRD சளி மருந்து புதன்கிழமை காலையும் வழங்கப்படும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10547)

## வாழ்த்துகின்றோம்



எமது பகுதிக் கிராம அலுவலரும் எம்குடும்ப நண்பருமான மதிப்புக்குரிய

**திரு.கந்தையா இராசதுரை**

அவர்கள் நீதியமைச்சினால் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன், இறையருளுடன் இன்னும் பலமேன்மைகள் பெறுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*"பதவியால் பெருமைதேடும் பதர்கள் வாழும் இவ்வுலகில் பதவிக்கே பெருமை சேர்க்கும் மனிதராக வாழ்வீர் எம் பெருந்தகையே"*

பொன்னம்பலம் ஜெயஸ்கரன் (அப்பன்) குடும்பத்தினர்,
கந்தையா யோகநாதன் குடும்பத்தினர்.

*ஏரந்தனை, புத்தூர் வடக்கு, புத்தூர்.* (10557)







## ஆயுத கண்காணிப்பு குழு தொடர்பான

# ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தை ஈராக்கிய நாடாளுமன்றம் நிராகரித்தது!

## இறுதி முடிவை எடுப்பதற்கு அதிபர் சதாமுக்கு அனுமதி

பக்தாத்,நவம்பர்13

**ஈராக்கில் உள்ளதாகக் கூறப்படும் பேரழிவுதரும் ஆயுதங்களைக் களையும் ஐ.நாவின் புதிய ஆயுதக் கண்காணிப்புத் திட்டத்தை ஈராக்கிய நாடாளுமன்றம் முற்றாக நிராகரித்துள்ளது. ஆனால், ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவை எடுக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் அதிபர் சதாம் ஹுசைனுக்கு வழங்கியுள்ளது.**




அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் ஆயுதக் கண்காணிப்பாளர்களை மீண்டும் அனுமதிப்பது குறித்து ஈராக் 7 நாள்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது. இதனை அடுத்து ஈராக்கிய நாடாளுமன்றம் அவசரமாகக் கூடி இந்த விடயம் குறித்து ஆராய்ந்தது.

இது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. 200 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை நிராகரிக்குமாறு நாட்டின் வெளிநாட்டு உறவுகளுக்கான குழுவுக்கு சிபாரிசு செய்வது என்றும் அது தீர்மானித்தது.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் அதிபர் சதாமே இது தொடர்பான இறுதி முடிவை மேற்கொள்வதற்கு அனுமதிப்பது என்றும் -

அவரது எந்த முடிவுக்கும் நாடாளுமன்றம் முழு பக்கபலமாகச் செயற்படுவது என்றும் -

நாடாளுமன்றம் மேலும் முடிவு செய்தது.

ஆனால், அதிபர் சதாம் ஹுசைனின் இளைய மகன் உடே மட்டும் ஐ.நா. தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார். "நாடாளுமன்றம் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஐ.நா. தீர்மானம் குறித்து விவாதித்து, தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கவேண்டும். பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அங்கீகரிக்கவேண்டும். அமெரிக்காவிடம் இருந்து ஈராக்கிய நாடாளுமன்றம் எதை எதிர்பார்க்கின்றது என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும்" என்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் கூறியிருந்தார்.

ஆனாலும், ஈராக் நாடாளுமன்றம் ஐ.நா. தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளது. ஆனாலும் இது இறுதித் தீர்மானம் இல்லை. அதிபர் சதாம் ஹுசைன் எடுப்பதே இந்த விடயத்தில் இறுதியானதும் தீர்க்கமானதுமான முடிவாக இருக்கும்.

அதேசமயம் -

ஈராக்கிய நாடாளுமன்றத்தின் முடிவு குறித்து பிரான்ஸ் எச்சரித்துள்ளது. இந்த முடிவுக்கு அர்த்தம் யுத்தத்துக்கு தயார் என்பதே என்றும் அது தெரிவித்துள்ளது.

தீர்மானம் தொடர்பாக ஈராக்கிய அதிபர் வெள்ளிக்கிழமை ஒரு முடிவை எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை ஏற்றுக்கொள்வதில் ஈராக் முரண்பட்டு நிற்கின்றது.

தன்னிடம் உள்ள ஆயுதங்களின் விவரங்களை ஈராக் வெளியிடவேண்டும் என்ற விடயமும் ஆயுதக் கண்காணிப்பாளர்கள் சந்தேகத்துக்கிடமான ஆயுதத் தளங்கள் எவற்றையும் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற விடயமுமே ஈராக்கிற்கு உடன்பாடனவை அல்ல.

## தேவாலயத்தினுள் 3நாள்களாக அடைபட்டுக்கிடக்கும் அகதிகள்

### பிரான்ஸின் வடக்கு நகரில் பரிதாபம்

பரிஸ்,நவ.13

பிரான்ஸில் தேவாலயம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகள் பலர் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். கடந்த மூன்று நாள்களாக அவர்கள் அந்த தேவாலயத்திற்குள்ளேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு பிரான்ஸின் கலைஸ் என்ற இடத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோதகுடியேற்றவாசிகளே இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர். அருகில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றுக்குள் தம்மை அனுமதிக்க மறுத்தால் தாம் உண்ணாவிரதத்தில் குதிக்கப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அந்த அகதி முகாமுக்குள் அண்மைக் காலமாக எவரையும் புதிதாக சேர்த்துக்கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

குறைந்தது 70 தஞ்சம் கோருவோர் தேவாலயத்துக்குள் இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் கூறினர். தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் அவர்கள் அந்த தேவாலயத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்த தேவாலயத்துக்கான மின் விநியோகம் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளது.

உள்ளே இருக்கும் தஞ்சம் கோருவோரில் அதிகமானவர்கள் ஈராக்கிய மற்றும் ஆப்கான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் பிரான்ஸுக்குள் நுழைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களை தேவாலயத்தில் இருந்து வெளியேற்றி பிரான்ஸின் வேறு இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்குக் கொண்டு செல்வதற்கு அதிகாரிகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம)


தேவாலயத்துக்குள் அடைபட்டுள்ள அகதிகள்

## அமெரிக்காவின் தென்பகுதியில் புயல் தாக்கியதில் 36பேர் பலி!

வாஷிங்ரன்,நவ.13

அமெரிக்காவின் தென் பகுதியில் கனேடிய எல்லையோரப் பகுதிகளில் வீசிய கடும் புயல்காற்று காரணமாக அப்பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. குறைந்தது 36பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டசின் கணக்கானவர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

புயல்காற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுடனான தொலைத் தொடர்புகள் மிகமோசமாகியுள்ளன. இதனால் மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துவது இயலாததாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், அவசர மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

புயல் பாதித்த பகுதிகளில் மிக மோசமான சொத்தழிவுகள் ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

(ம)

## கொலம்பியாவில் ஆயர் ஆயுததாரிகளால் கடத்தல்

பொகோட்டா,நவ.13

கொலம்பியாவில் ஆயுததாரிகளால் ஆயர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். லத்தீன் அமெரிக்காவில் செல்வாக்குப் பெற்றவரான ஜோர்ஜ் என்றிக்குயிக் ஜிமென்ஸ் என்ற ஆயரே கடத்தப்பட்டுள்ளார். இவர் லத்தீன் அமெரிக்க பிஸ்கோப்பல் மாநாட்டுத் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றார்.

அவருடன் சேர்ந்த மற்றுமொரு கிறிஸ்தவ மதகுருவும் கடத்தப்பட்டுள்ளார்.

உள்ளூர் நேரப்படி காலை 10 மணியளவில் வீதியில் ஆயர் சென்றுகொண்டிருந்த காரை வழிமறித்த இரு ஆயுததாரிகள் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர். தலைநகருக்கு வடக்கே 55 கிலோமீற்றர் தொலைவில் இருந்த நகர் ஒன்றுக்கு மத விழாவுக்கு ஆயர் சென்றுகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படையே (எவ்.ஏ.ஆர்.சி) இந்தக் கடத்தல் சம்பவத்துக்குக் காரணம் என்று இராணுவம் கூறுகின்றது.

ஆயருடைய காரை செலுத்திய சாரதியும் காரில் இருந்த ஆசிரியர் ஒருவரும் கடத்தல்காரர்களால் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆயரை விடுவிப்பதற்கு 37 ஆயிரம் டொலர்களுக்கு மேற்பட்ட தொகையைப் பிணைப்பணமாகக் கேட்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

(ம)

## துல்கரம் நகருக்குள் நுழைந்து இஸ்ரேலியப் படை அட்டூழியம்

### வீடுகளை உடைத்து அழிக்கின்றது

ஜெருசலேம்,நவ.13

மேற்குக்கரைப் பகுதியில் பலஸ்தீன அதிகாரசபைக்குரிய துல்கரம் நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துள்ளன. அங்குள்ள வீடுகள் பலவற்றையும் அவை அழித்துள்ளன. அழிக்கப்பட்ட வீடுகள் தீவிரவாதிகளுடையவை என்று இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

வார இறுதியில் இஸ்ரேலிய நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையிலேயே இந்த இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது. அந்தத் தாக்குதலில் தாயும் அவரது இரு குழந்தைகளும் உட்பட ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

வார இறுதியில் நடந்த தாக்குதலில் உயிரிழந்த குழந்தைகள்



துல்கரம் நகரிலுள்ள பலஸ்தீன அகதிமுகாமே இஸ்ரேலிய இராணுவத்தின் முக்கிய இலக்காக இருந்ததாக உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர். 30 டாங்கிகள், கவச வாகனங்கள், ஜீப்புகள் என்பன சகிதம் பெருமளவு இஸ்ரேலியத் துருப்பினர் அகதிமுகாம் பகுதிக்குள் நுழைந்ததாக நேரிற் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையை சில மணி நேரத்தில் முடித்துக்கொண்டு இஸ்ரேலியப் படைகள் அகதி முகாமைவிட்டு வெளியேறிவிட்டதாகவும் -

இந்த நடவடிக்கையின் போது அகதிமுகாமில் இருந்து மூன்று பேரைத் தாம் கைதுசெய்துள்ளதாகவும் -

வார இறுதியில் நடந்த தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதிகள் துல்கரம் மற்றும் நப்லஸ் பகுதிகளில் மறைந்துள்ளனர் என்றும் -

இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

வார இறுதியில் தாக்குதல் நடந்த இடத்தை திங்களன்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் புதிய பாதுகாப்பு அமைச்சர் சவுல் மொவ்வ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு தனிக் குழு ஒன்றைத் தான் நியமித்துள்ளதாக பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை மாதங்களே இருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் ஷெரோன் அரசு மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதத்துக்கு எதிராக காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் ஷெரோன் அரசு எடுக்கவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஷெரோன் தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லையெனில் அவரது கட்சிக்குள்ளேயே அவர் அதிக நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். (ம)

# மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம்

வெளியகல்வு

| | |
|---|---|
| (வெ/401) | கைலைநாயகி கனகரட்ணம் |
| (வெ/402) | சுப்பிரமணியம் தேவ் ஆனந் |
| (வெ/406) | சிங்காரம் ஞானசுந்தரம் |
| (வெ/408) | செல்வி சரோஜினிதேவி கணேசரட்ணம் |
| (வெ/409) | செல்வி கேதீஸ்வரி குமாரசாமி |
| (வெ/417) | அன்னலிங்கம் சுதாகரன் |
| (வெ/421) | செல்வி சந்திரவதனி சுப்பிரமணியம் |
| (வெ/427) | செல்வி வசந்தரூபி நந்தகுமார் |
| (வெ/429) | சுப்பிரமணியம் தயாளன் |
| (வெ/433) | சண்முகநாதன் உருத்திரநாதன் |
| (வெ/440) | கந்தப்பிள்ளை சிவலிங்கம் |
| (வெ/444) | பொன்னையா தருமராசா |
| (வெ/445) | செல்வி ரஞ்சினி சிவானந்தன் |
| (வெ/448) | செல்வி மாலதி சுப்பிரமணியம் |
| (வெ/451) | தம்பிராசா தம்பித்துரை |
| (வெ/452) | செல்லத்துரை நிர்மலகாந்தன் |
| (வெ/453) | செல்லத்துரை கண்ணதாசன் |
| (வெ/468) | சுப்பிரமணியம் கனகசிங்கம் |
| (வெ/469) | செல்வி சாவித்திரி லிங்கநாதன் |
| (வெ/474) | சின்னத்துரை கணேசபிள்ளை |
| (வெ/475) | சிவஞானபோதம் ரவீந்திரன் |
| (வெ/492) | சிவகுரு சுந்தரலிங்கம் |
| (வெ/500) | செல்வி தர்மேஸ்வரி இரத்தினசிங்கம் |
| (வெ/503) | இராமுப்பிள்ளை செல்வராசா |
| (வெ/509) | வேலாயுதபிள்ளை அருட்குமார் |
| (வெ/511) | வேலாயுதபிள்ளை கந்தசாமி |
| (வெ/512) | ஆசை கனகலிங்கம் |
| (வெ/513) | செல்வி சந்திரலதா ஆனந்தகுமார் |
| (வெ/517) | செல்வி மஞ்சுளா உதயகுமார் |
| (வெ/519) | செல்வி யோகராணி இராசரட்ணம் |
| (வெ/536) | செல்வி ஜீவிதா தேவகுமார் |
| (வெ/545) | செல்வி பத்மினிதேவி கபாநாயகம் |
| (வெ/571) | முத்துக்குமாரசாமி செல்வக்குமாரசாமி |
| (வெ/575) | சுப்பிரமணியம் சண்முகரட்ணம் |
| (வெ/580) | கந்தையா பாலசுந்தரம் |
| (வெ/595) | செல்வி ஜெயந்தி ரூபகுமார் |
| (வெ/600) | செல்வி கிரிஜா வசீகரன் |
| (வெ/612) | செல்வி குணபூஷணி ஏகாம்பரம் |
| (வெ/613) | செல்வி இராசம்மா சண்முகராஜா |
| (வெ/615) | செல்லையா நவரத்தினம் |
| (வெ/616) | நாகலிங்கம் கணேசலிங்கம் |
| (வெ/627) | செல்வி சரோஜினிதேவி சிவலோகநாதன் |
| (வெ/630) | முத்துலிங்கம் நடராஜா |
| (வெ/632) | செல்வி மல்லிகா சிவானந்தன் |
| (வெ/636) | அரியகுட்டி சிவநேஸ்வரன் |
| (வெ/637) | செல்வி ஜீவரஞ்சனி பாலேந்திரன் |
| (வெ/641) | கந்தசாமி இராஜன் |
| (வெ/676) | வெள்ளையர் தெய்வேந்திரம் |
| (வெ/687) | செல்வி பராசக்தி விநாயகதேவராஜா |
| (வெ/690) | சிவசுப்பிரமணிய அரியரட்ணம் |
| (வெ/694) | சதாசிவம் நவரத்தினராசா |
| (வெ/695) | செல்லையா மகேஸ்வரன் |
| (வெ/723) | செல்வி உமாதேவி ஜெபநேசன் |
| (வெ/728) | செல்வி மகேஸ்வரி கதிரமலைநாதன் |
| (வெ/729) | செல்வி கமலநாயகி பொன்னையா |
| (வெ/731) | மாணிக்கம் பாலசுப்பிரமணியம் |
| (வெ/742) | செல்வி இராசாத்தி கணபதிப்பிள்ளை |
| (வெ/760) | செல்வி லலீலா கணேசலிங்கம் |
| (வெ/762) | இளையதம்பி நடராசா |
| (வெ/781) | அருளானந்தன் குணநேசன் |
| (வெ/784) | பரராஜசிங்கம் சிறிபிரதாபன் |
| (வெ/804) | மயில்வாகனம் சுப்பிரமணியம் |
| (வெ/819) | செல்வி இராசினி புஸ்பராசா |
| (வெ/828) | சின்னையா புலேந்திரன் |
| (வெ/831) | செல்வி மகேஸ்வரி வேலாயுதம் |
| (வெ/836) | பொன்னம்பலம் திருச்செல்வம் |
| (வெ/865) | செல்லத்தரை சத்தியமூர்த்தி |
| (வெ/886) | செல்வி வசந்தமல்லிகாதேவி பாலகிருஷ்ணன் |
| (வெ/891) | ஆனந்தசபாபதி மகேஸ்வரன் |
| (வெ/896) | இரத்தினம் இரத்தினசோதி |
| (வெ/897) | கந்தையா மகேந்திரசோதி |
| (வெ/930) | நல்லையா மகேஸ்வரன் |
| (வெ/938) | செல்வி சரோஜினிதேவி பாலசிங்கம் |
| (வெ/946) | விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் |
| (வெ/947) | பொன்னையா சுந்தரலிங்கம் |
| (வெ/949) | சரவணமுத்து பாலசிங்கம் |
| (வெ/956) | செல்வி ரஜினி இராஜகுலேந்திரன் |
| (வெ/957) | செல்வி பாக்கியலட்சுமி துரைரத்தினம் |
| (வெ/959) | செல்வி செல்வமலர் அல்பேட் |
| (வெ/975) | செல்வி சரஸ்வதி இராகுலன் |
| (வெ/984) | சுப்பையா விவேகானந்தம் |
| (வெ/985) | பிரான்சிஸ் யேசுதாசன் பேபியன் |
| (வெ/988) | செல்வி ஜெயராணி ஆனந்தசபாபதி |
| (வெ/997) | இராமலிங்கம் சண்முகலிங்கம் |
| (வெ/1006) | செல்வி ஜெயந்தினி தவரஞ்சன் |
| (வெ/1048) | செல்வி ஜெயகௌரி செந்தில்வேல்ராஜா |
| (வெ/1049) | முருகேசு இராசரட்ணம் |
| (வெ/1060) | செல்வி ராணி தீதையாளன் |
| (வெ/1061) | பச்சைமுத்து சுப்பிரமணியம் |
| (வெ/1063) | செல்வி லாலா கோபிறதா சிவனேசன் |
| (வெ/1113) | வேலுப்பிள்ளை கிருஸ்ணராஜா |
| (வெ/1124) | விசுவநாதப்பிள்ளை மனோகரன் |
| (வெ/1132) | கந்தையா கிருஸ்ணானந்தசிவம் |
| (வெ/1140) | செல்வி நந்தினி சிறிதரதாஸ் |
| (வெ/1179) | செல்வி இமெல்டாமகேஸ்வரி ஜெயக்குமார் |
| (வெ/1237) | சின்னத்தம்பி இராசையா |
| (வெ/1241) | செல்வராயன் செல்லப்பா |
| (வெ/1250) | செல்வி பரமேஸ்வரி கந்தையா |
| (வெ/1265) | செல்வி நந்தினி மனோகரன் |
| (வெ/1270) | நடராசா நவநீதன் |
| (வெ/1278) | இரத்தினம் தங்கராசா |
| (வெ/1279) | கேசவன் சற்குணம் |
| (வெ/1282) | சின்னப்பு சேனாதிராசா |

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 15 - 03 - 1962 இலங்கை



ஆண்டவன் அடியில் 13 - 11 - 1998 சுவிஸ்

### அமரர் செல்லையா சிவாஸ்வரன்

திதி: அபரபக்க தசமி

*ஆருயிரே என் அன்புத் தெய்வமே!*
*ஆண்டு 4 அல்ல 1000 சென்றாலும்*
*ஆறுமோ என் உள்ளம் உயிர் உள்ளவரை?*
*ஆயிரம் உறவுகள் இருந்து என்ன?*
*ஆதரிப்பார் இருந்து என்ன அப்பா?*
*எங்கள் அப்பா போல் ஆகுமோ?*
*அப்பா உங்கள் ஆத்மா சாந்திபெற*
*வேண்டுகின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரங்கள், மச்சான்மார்,
மச்சாள்மார், மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

*செல்வறங்கம்,*
*இணுவில் மேற்கு,*
*சுன்னாகம்.* (10541)

## மரண அறிவித்தல்

### கைலாயர் வேலாயுதம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

வரணி, கரம்பைக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயர் வேலாயுதம் 11.11.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் நாகதேவன் (கிராம உத்தியோகத்தர், நாவற்காடு, வரணி), இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பநாதன்(தே.வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்), தேவவதனி(சங்கீத ஆசிரியை, வரணி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாட்சாயினி (மெதடிஸ் கல்லூரி, பருத்தித்துறை), மயூரி, சாம்பவி(வரணி மகாவித்தியாலயம்), வசந்த், துளசிகா, நிசாந்த் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.11.2002) புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
வரணி மகாவித்தியாலயம் அருகில்,
வரணி. (10543)

தகவல்:
வே.நாகதேவன்
(கிராம உத்தியோகத்தர்)

### திருஞானசம்பந்த வித்தியாசாலை பரிசளிப்புதினம்

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் பொ.கணேஸ வரலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ள இவ்விழாவில் சட்டத்தரணி மா.திருவாதவூரன் பிரதம விருந்தின ராகவும், உடுவில் கோட்ட உதவிக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஓ)

### கலை இலக்கிய அனுபவப் பகிர்வு

கலை இலக்கிய அனுபவங் களைப் பகிரும் நோக்குடன் தூண்டி இலக்கிய வட்டத்தால் கலந்துரை யாடல் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்.பல் கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் இலக்கியப் பகிர்வாளராக கலாநிதி இ.முருகையனும் சிறப்பு ரைஞராக கவிஞர் த.ஜெயசீலனும் பங்குகொள்கின்றனர். (ஓ-49)


**வேலையாள்கள் தேவை**

வேலையாள்கள் தேவை.
தங்கியிருக்க வசதியுண்டு நல்ல சம்பளமும் சாப்பாடும் தரப்படும்.
உடன் நேரில் வரவும்.
தனபாலசிங்கம்
19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தையடி,
நல்லூர்.
(10546)



**நிபுணத்துவ வைத்திய சேவை**

இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல சர்வதேச மாற்று மருத்துவ நிபுணரும், சர்வதேச மாற்று மருத்துவப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், வைத்திய விஞ்ஞான சர்வதேசப் பதிவேட்டிலுள்ளவரும், இங்கிலாந்தில் மாற்றுமருத்துவராகப் பணிபுரிபவருமான

டாக்டர் மருது கந்தப்பு PhD அவர்களால்
மேலைநாட்டு முறைகளான ஒஸ்ரியோபதி
Osteopathy & CNT மூலம்

வாத உபாதைகளுக்கும் Arthritis, மூட்டுவலிகளுக்கும் Stress & Strain முதலியவற்றால் ஏற்படும் வியாதிகளுக்கும் 11.11.02 தொடக்கம் 17.11.02 வரை சிகிச்சை அளிக்கப்படும். ஒருமணித்தியாலத்துக்கு ஒரு நோயாளிக்கு மட்டும் சிகிச்சை அளிப்பதால் உங்களுக்கான பார்வை நேரத்தை தயவுசெய்து முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும். சிகிச்சை நடைபெறும் இடம்:

Lanka Ayurvedic Medical College Hospital
127, Stanley Road, Jaffna.
தொடர்பு தொலைபேசி எண்: 222 3445
CNT(Clerebro - Neural Technique)
பற்றிப் படிக்க விரும்புவோர் பின்வரும் email விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.
maruthu_canthaboo@btinternet.com (C/24721)



**MEDICAL ACADEMY OF LATVIA**

Republic of Latvia (within EU by 2004)

ஜனவரிக்கு மாணவர் சேர்ப்பு

MD Six years, BDS Five years English medium A/L Three Passes including Chemistry& Biology.

மாது பூரண அங்கீகாரம் பெற்ற

Admission Executive: **Dr.Maruthu Canthaboo** Ph.D அவர்கள் யாழ்.நகரில் 11.11.2002 - 17.11.2002 வரை சரோஜ் லொட்ஜ், 62, விதானையார் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் மாணவர் தேர்வை நடத்துகின்றார்.

சந்திக்கும் நேரம் மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை.

முகவர் கட்டணம் இல்லை

E mail : iusr-uk@btinternet.com (10474)


உ

## விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸர்வமங்கள சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் (15.11.2002) வெள்ளிக்கிழமையும் உத்திரட்டாதி நட்சத்திரமும் பூர்வ ஏகாதசி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 9.30 மணிமுதல் 10.15 மணிவரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| உசன் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயரின் பௌத்திரியும் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்களின் ஏகபுத்திரியுமாகிய சௌபாக்கியவதி | தெல்லிப்பழை சிவஸ்ரீ சிவசாமிக்குருக்களின் பௌத்திரனும் சிவஸ்ரீ தர்மராஜக்குருக்களின் சிரேஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி |
| *துர்க்காநந்தினியை* | *பிரம்மஸ்ரீ தர்மப்பிரதீபசர்மாவுக்கு* |

கன்னிகாதான, மாங்கல்யதாரண, பாணிக்கிரகணம் செய்ய பெரியவிளான் வடசேரிப் பிள்ளையாரின் அருளுடனும் அன்னை துர்க்காதேவியின் துணையுடனும் காஞ்சிகாமகோடி ஜெகத்குரு பீடாதிபதி சுவாமிகள் ஆசியுடனும் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் மேற்படி சுபமுகூர்த்தம் தெல்லிநகர் துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*சாவர்த்தனம்:-* 15.11.2002 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணி (மணமகள் இல்லத்தில்)
*வதூவரகிரகப் பிரவேசம்:-* மாலை 5 மணி

தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ இசுந்தரேஸ்வரக்குருக்கள் தம்பதிகள்
மற்றும்
உறவினர்கள்.
*ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,*
*துர்க்காபுரம், தெல்லிப்பழை.*

(10349)

சிவஸ்ரீ சி.தர்மராஜக்குருக்கள் தம்பதிகள்,
சிவஸ்ரீ ஜெ.பாலசுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகள்,
சிவஸ்ரீ ஆ.பழனிக்குருக்கள் தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ த.தர்மதர்ஷன் சர்மா.

திரு வீட்டார் அழைப்பு 'லட்சுமி வாசம்', பெரிய விளான், இளவாலை.

# ஜே.வி.பியினருக்கு எதிராக நாடாளுமன்றில் சொல்லம்புகள்!

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் களைகட்டியது. நேற்றுமுன்தினம் ஜே.வி.பியினருக்கு முழுநாளும் ராகு காலம்போலவே அமைந்திருந்தது. காலைமுதல் மாலைவரை பல பக்கத்திலிருந்தும் சொற்கணைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சபை ஆரம்பத்திலேயே முதலாவது ஏவுகணைத் தாக்குதலைத் தொடங்கினார். என்ன துரதிர்ஷ்டமோ பதில் தாக்குதல் நடத்தப் போதுமான உறுப்பினர்கள் ஜே.வி.பியினரின் பக்கம் இருக்கவில்லை. எனினும், இருந்த சில ஜே.வி.பி. உறுப்பினர்களும் சளைக்காமல் பதில் கணைகளை விடுத்துக்கொண்டேயிருந்தனர்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை பத்துமணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடியது.

வழமையாக கேள்வி நேரத்தின் போது கம்பஹா மாவட்ட எம்.பியான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, வெளிநாடுகளில் பணிபுரிந்துவிட்டு நாடுதிரும்பும் இலங்கையர்களிடம் வருமானவரி அறவிடும் திட்டத்தைக் கண்டித்தார்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் சொக்ஸி, இந்த வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக தெளிவான விளக்கம் பெற்றுக்கொள்ளாமலேயே இப்படி உளறுகின்றனர். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவுசெய்துகொண்டபின் வெளிநாட்டிற்குச் செல்பவர்களுக்கு எந்த விதமான வருமான வரியும் அறவிடப்படமாட்டாது. மாறாக, மேலும் பல விமோசனங்களையும் வழங்கியுள்ளோம் என்று கூறினார்.

தம்மைப் பதிவுசெய்துகொள்ளாமல் தவறான வழிகளில் சென்றவர்களுக்கும் வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. 30 சதவீத வரி 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று தொழில், தொழில்வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் சுட்டிக் காட்டினார்.

**ஜோன் அமரதுங்க**

இதன் பின்னரே உள்துறை அமைச்சர் சபாநாயகரின் அனுமதியுடன் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

நாட்டில் கொளுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண அரசு விளைகிறது. வடக்கு - கிழக்கில் போர்நிறுத்தம் செய்து அமைதி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை, தென்பகுதியில் இரத்தக் களரியை ஏற்படுத்தவும், கொலைக் கலாசாரத்தை மீண்டும் உருவாக்கவும் சிலர் முனைகின்றனர் - என்றார் அமைச்சர்.

அண்மையில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்கள், படுகொலைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது இவற்றின் பின்னணியில் ஜே.வி.பி. இயக்கம் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது - என்றும் அவர் சொன்னார்.

1989களில் மேற்கொண்ட கொலைக் கலாசாரத்தை மீண்டும் உருவாக்க முனைகின்றனர். இதற்கு இடமளிக்க மாட்டோம் எனக் குறிப்பிட்டு ஜே.வி.பியினரின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்தார் அவர்.

அப்போது சபையில் இருந்த ஜே.வி.பி. உறுப்பினர் ஏதோ கூற முற்பட்டபோது மற்றொரு உறுப்பினரான விமல் வீரவன்ஸ அவரைக் கையமர்த்தி இருக்கச் செய்துவிட்டார்.

கனல் பறக்கும் விவாதமும் காரசாரமான கருத்து மோதல்களும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அப்படி ஏதும் நடக்கவில்லை. அமைச்சரின் கூற்றை ஜே.வி.பியினர் மறுக்கவில்லை. மாறாக அமைதி பேணினர்.

**பவித்திராதேவி வன்னியாராய்ச்சி**

இதன்பின், வரவு - செலவுத் திட்டம் மீதான நான்காவது நாள் விவாதம் ஆரம்பமானது. இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.முன்னணி உறுப்பினரான திருமதி பவித்திராதேவி வன்னியாராய்ச்சி விவாதத்தை ஆரம்பித்தார்.

சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகாவே ஆரம்பித்து வைத்தார். சமாதானத்தை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசு, பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து தமிழீழத்தைப் பிரித்துக்கொடுக்கப்போகின்றது - என்றார் அவர்.

தென்பகுதி மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. ஆனால், அரசு வடக்கை மட்டுமே பார்க்கின்றது. இது புலிகளின் பட்ஜட் - என்றும் வர்ணித்தார் பவித்திராதேவி வன்னியாராய்ச்சி.

**எஸ்.பி.திஸாநாயக்க**

அடுத்து, எதிர்க்கட்சியினரின் முன்னாள் சகாவும் இப்போது அவர்களின் சிம்ம சொப்பனமாகக் கருதப்படுபவருமான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற்றினார்.

ஆரம்பமே கண்ணிவெடிகள்போல அவரது உரை வெடித்துச் சிதறியது. ஜனாதிபதியின் முறைகேடான நிதி நிர்வாகமே நாட்டைக் குட்டிச்சுவராக்கியது என்றார் அவர். ஜே.வி.பியினருடன் கூட்டமைத்த நன்னடத்தை அரசு, நாட்டை வங்குரோத்து அடையச் செய்துவிட்டது என்று கூறிய அமைச்சர், ஜே.வி.பியினரின் கடந்த கால கொலைக் கலாசாரம் தொடர்பாகவும் கடும் கண்டனங்களை அவிழ்த்துவிட்டார்.

ஆரம்பம்முதல் வழமைக்கு மாறாக அமைதியாக இருந்த ஜே.வி.பி. உறுப்பினரான விமல் ரத்னாயக்கா ஆவேசத்துடன் எழும்பினார்.

"இப்போது நாங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து நேர்மையான அரசியல் நடத்துகின்றோம். நாம் அரசியல் அரங்கில் பெற்றுவரும் வெற்றியைக் கண்டு அரசால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அதனாலேயே எமது அமைப்பின்மீது சேறுபூசப் பார்க்கின்றனர். இதனால் எங்கே ஓர் அசம்பாவிதம் இடம்பெற்றாலும் எம் மீது பழி சுமத்துகின்றனர். இதில் எந்தவிதமான உண்மையுமில்லை" என்று குறிப்பிட்ட அவர், "இந்த அரசு கையாலாகாத ஓர் அரசு. புலிகளின் முன் மண்டியிட்டுள்ளது. பிரபாவை எதிர்த்துக்கொண்டு எதையும் செய்ய முடியாத அரசு" - என்றும் சாடினார்.

**எம்.எச்.முஹம்மது**

ஜே.வி.பி. உறுப்பினரைத் தொடர்ந்து மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முஹம்மது உரையாற்றினார்.

அவர் தமது பேச்சின்போது, வடக்கு - கிழக்கு மாகாண[illegible] வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள[illegible] ஒற்றுமையை வலியுறுத்தினார். தெ[illegible] பகுதியில் வாழும் முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ்வதுபோல் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களால் தமிழர்களுடன் ஏன் இணைந்து வாழமுடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் முஹம்மது மற்றுமொரு விடயத்தையும் போட்டுடைத்தார்.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தமக்குத் தனியான அலகு ஒன்று தேவை என்று கூறவில்லை. இதனைத் தன்னால் நேரடியாகவே அறியமுடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.




நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிட்டதாகக் கூறிய முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் இன்னும் சபைக்குச் சமுகமளிக்கவில்லை என்பதும் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட ஏனைய உறுப்பினர்களும் நேற்று முன்தினம் சபைக்கு வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை. •

**சித்தார்த்தன்**

அமைச்சரின் பேச்சைத் தொடர்ந்து புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் உரையாற்றினார். அவர் தமது பேச்சின்போது இரண்டு தேசியக் கட்சிகளையுமே கடுமையாகச் சாடினார். தமிழர்களின் உரிமைகளை மதிப்பதில் ஐ.தே. கட்சிக்கும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் உள்ள ஒற்றுமை, தமிழர்களுக்கு உரிமைகளைக் கொடுப்பதில் இல்லை. தாங்கள் கொடுப்பதுபோல் கொடுக்கின்றோம் நீங்கள் வழமையாக எதிர்ப்பதுபோல் எதிர்த்துப் பேசுங்கள் என்று இரண்டு கட்சிகளும் உடன்பாட்டுடனேயே செயற்படுகின்றன. இதில் சந்[illegible]கமே இல்லை. என்றாலும் பிரதமர் [illegible]ல் சமாதானத்தில் நம்பிக்கை [illegible]ண்டுள்ளார். இதனால் இந்த அரசின் வரவு - செலவுத் திட்டத்தை நாங்க[illegible] [illegible]தரிக்கின்றோம் என்றும் சித்தார்[illegible]ன் எம்.பி. கூறினார்.

**ஜ[illegible] ஜயவர்த்தன**

வடக்கு - கி[illegible]க்கு மாகாணத்துடன் நெருங்கிய தொ[illegible]ர்புகளை உடையவரும் புனர்வாழ்[illegible] அகதிகள் மீள் குடியமர்த்தல் அ[illegible]மச்சருமான டாக்டர் ஜயலத் ஜயவர்[illegible]தனவும் உரையாற்றினார்.

அமைச்சர் பேசும்போது எதிர்த் தரப்பில் இருந்து பல குரல்கள் கிண்டல் அடித்துக்கொண்டே இருந்தன. எனினும், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அவற்றைப் பொருட்படுத்தாமல் தமது உரையைத் தொடர்ந்தார்.

ஆசியாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற முதல்தர நூல்நிலையமான யாழ்.நூல் நிலையத்தை இவ்வருட இறுதிக்குள் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப் போகின்றோம் என்றார் அவர்.

"ஆமாம்! அந்த நூல் நிலையத்தைத் தீவைத்துக் கொளுத்தியவர்கள் நீங்கள்தானே. அதனை நாங்கள் மறுசீரமைத்துக் கட்டினோம். இப்பொழுது நீங்கள் திறக்கப்போகின்றீர்கள். இது குறித்து நீங்கள் வெட்கப்படவேண்டுமேயன்றி அதில் நீங்கள் பெருமைப்பட ஒன்றுமேயில்லை!" என்று பதிலடி கொடுத்தார் கம்பஹா மாவட்ட எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. தொடர்ந்து பேசிய டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கூறியதாவது:- ஜே.வி.பியினரும் பொ.ஐ.முன்னணியினரும் நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தி நாட்டை இரண்டாகப் பிரித்து வைத்திருந்தனர். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் வடக்கையும் தெற்கையும் இணைத்துவிட்டோம். யாழ்ப்பாண மாம்பழங்கள் இங்கே வருகின்றன. அதேபோல் கொழும்பு அன்னாசி யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது.

யுத்தம் ஒன்று நடைபெற்றது என்பதையே மக்கள் மறந்து நிம்மதியாக இருக்கின்றனர். எதிர்க்கட்சியினர் இந்த நிம்மதியைக் கெடுத்துவிடக் கூடாது என்று கோரிக்கைவிடுத்தார் புனர்வாழ்வு அமைச்சர். வரவு - செலவுத்திட்ட உரைமீதான 5ஆவது நாள் விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெறும். (ஒ)

# இரண்டும் கெட்டான் நிலையிலிருந்து மீள அரசின் அடுத்த நகர்வு என்ன?

## முதல் வருட பூர்த்திக்கு நாள் நெருங்குகின்றது

ரணில் தலைமையிலான அரசு பதவியேற்று இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. ஆனால், ஒரு அரசின் முழுத் தவணைக்காலத்தின் அந்திமத்தில் இருப்பதுபோன்ற பிரேமையே நாட்டு மக்களின் உள்ளங்களில் குடிகொண்டுள்ளது.

அதிகாரத்துக்கும் பதவிகளுக்குமான ஒரு கூட்டுச் சோலையே அரசு என்றாகிப் போய்க்கொண்டிருக்கிறது.

அதிகாரத்தையும் பதவியையும் தக்கவைத்துக்கொள்வதற்காக அரசு முன்னெடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்விகண்ட நிலையில், சமாதானப் பேச்சின் இரண்டாவது கட்டத்திலும் கால் பதித்துவிட்டது.

சமாதானப் பேச்சு உரிய திசையில் சென்று வெற்றியடைய வேண்டுமானால் உறுதியான அரசாங்கம் இருப்பது கட்டாய தேவையாகும். ஆனால், அது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் இருப்பையும் அதன் கடிவாளத்தையும் கெட்டியாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் முதன்மையானதே 19ஆவது திருத்தமாகும்.

இதன் காரணமாக அரசின் இருப்புக்கு வானமே எல்லையாகிவிடுமோ என்ற அச்சமும் காணப்படாமல் இல்லை.

இதனை மையமாகக்கொண்டு பார்க்கையில் சமாதான முன்னெடுப்புக்கான பயணமே தோல்வி காண மாட்டாது என்று எழுந்தமானத்தில் கூறிவிடமுடியாது. ஏனென்றால் ஒன்றுசேர்ப்பது கடினம். ஆனால், குலைப்பதும், குழப்புவதும் சுலபம் என்பதே நினைவுக்கு வருகின்றது.

19ஆவது திருத்தம் தொடர்பாக அரசுக்கு ஏற்பட்ட படுதோல்வி சீதூக்கிப் பார்க்கமுடியாதது. அதன் தாற்பரியத்தையும், விளைவையும் இன்னும் சில நாள்களின் நகர்விலேயே காணமுடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

எவ்வளவுதான் தலைகீழாக நின்

**இஸ்மாயில் பி.ம.ஆரிஃப்**
(எல். எல். பி.)

றாலும் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் புரிந்துணர்வை பூரிப்படையும் வகையில் ஏற்படுத்தலாம் என்பது வெறும் பகற்கனவாகவே தென்படுகிறது. அன்றாட நிகழ்வுகளின் நகர்வை உற்றுநோக்குகையில், எந்த வகையிலும் அரசியல் ஸ்திரமின்மைக்குத் தளர்வு ஒரு வீதம் ஏற்பட்டதாகவும் கூறமுடியாதுள்ளது.

19ஆவது திருத்தத்தின்படி எதனையுமே(ஒன்றைத் தவிர) அறுதிப் பெரும்பான்மையும், சர்வஜன வாக்கெடுப்பும் இன்றி நிறைவேற்ற முடியாது என்றமைந்த தீர்ப்பை நாம் அறிவோம்.

அரசைப் பொறுத்தவரை அதன் அடிப்படைக் குறிக்கோள் இவை: நாடாளுமன்றக் கலைப்பின் மட்டுப்பாடு, பிரதமரை நீக்கிவிடாது இருத்தல், அமைச்சரவைக் கலைப்பைத் தடுத்தல், ரணிலையே தொடர்ந்து பிரதமராக வைத்திருத்தல், ஆட்சியை அதன் ஆயுட்காலம் முழுவதும் நகர்த்துதல் போன்றனவாகும்.

இவை அனைத்தையும் சட்டமாக்கவும், திருத்தவும், புதிதாகச் சேர்க்கவும் அரசு கையாண்ட யுக்தியே 19 ஆவது திருத்தமாகும். அதன்மூலமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடையவேண்டிய அத்தியாவசியத் தேவை இருந்தது.

நடைமுறையிலுள்ள யாப்பு மூலம் அதனை அடைவதிலுள்ள கஷ்டத்தை நன்குணர்ந்த அரசு, எதிர்க்கட்சிகளின தயவை நாடியது. சிலர் பச்சைக் கொடி காண்பித்தனர்.

ஆனால், அவர்களின் பதவி பறிபோய்விடக்கூடாது என்று அபிப்பிராயப்பட்டனர். அரசு, மனச்சாட்சி வாக்கை அளிக்கும் விதத்தில் ஓர் ஏற்பாட்டையும் உள்ளடக்கியது.

கட்சிகளிடையே சச்சரவு வரவே இத்திருத்தத்துக்கு மாத்திரமே என்ற குறிக்கோளை இலக்காகக் கொண்டதாக வாசகத்தை மாற்றி சட்டமாக்க முற்பட்டது.

ஆனால், நீதிமன்றமும் அதனைச சட்டவிரோதம் எனத் தீர்த்துவிட்டது. அடிப்படைக்குறிக்கோள்களையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இதற்குப் பிறகும் எதிரணியைச் சேர்ந்தோரிடமிருந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறத்தக்கதாக ஆதரவைப் திரட்டமுடியாது.

இதனாலேயே அரசின் முதுகெலும்பு உடைந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. இனி அரசு என்ன செய்யப்போகிறது?

"போனால் போகட்டும் போடா இந்தப் பாழாய்ப்போன அரசியலில் நிலைத்தது யாரடா" என்று விட்டுவிடப்போகிறதா?

அல்லது நீதிமன்றத்தின் ஆலோசனையை உள்வாங்கி சட்டத் திருத்தத்தை மீளமைத்து மீண்டும் தோல்வி காணப்போகிறதா? அல்லது வெற்றிக்கான பாதையை வகுக்கப்போகிறதா?

இதேவேளையில், பிரபாகரன்மீது விதிக்கப்பட்ட மேல்நீதிமன்றத் தீர்ப்பான 200 வருட கடூழியச் சிறைத் தண்டனை மற்றும் அவரது அசையும், அசையா ஆதனங்களை முடக்கி வைத்தல் அல்லது பறிமுதல் செய்தல் என்ற விடயம் உண்மையில் அனைவரையும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் உள்ளாக்கியிருக்கும்.

மேன்முறையீட்டுக்கு இடமுண்டு. அவ்வாறாயினும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுமானால் அதனை அரசாங்கமோ, நாடாளுமன்றமோ செய்யமுடியாது.

அரசமைப்பின்படி - கட்டற்ற மன்னிப்பை அல்லது சட்டமுறையான நிபந்தனைகளுக்கும் அமைவான ஒரு மன்னிப்பை வழங்கக்கூடிய தத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதை உறுப்புரை 34 கூறுகிறது.

தற்போது கீரியும் பாம்பும் நிலையில் காணப்படுவதாக உணரப்படும் ஜனாதிபதி அத்தகைய மன்னிப்பை வழங்க முன்வருவாரா என்பது கேள்விக்குறியாகும்.

★

# யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2003ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 29.11.2002ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

***பொருள்கள்:***

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்.
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்.
04. சித்தமருத்துவ மருந்துகள், மருந்துகள்.
05. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்.
06. பாதணிகள், மழைக் கவசம் மற்றும் தோற்பொருள்கள்.
07. கட்டடப் பொருள்கள் (சீமெந்து, கூரைத் தகடு, ஓடுகள் முதலியன)
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன.
09. கற்கள், மணல்கள்.
10. நீர் வழங்கு பொருள்கள், பி.வி.சி. குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
12. மின்சார இயந்திரப் பொருள்கள், மின் கருவிகள்.
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்.
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள், கிறீஸ்.
15. இரும்புப் பொருள்கள்.
16. பனை மரங்கள், சலாகைகள்.
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், டியூப் முதலியன.
19. தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக் கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசனிகளும், மருந்துகளும்.
22. கணனிகளுக்கான உதிரிப் பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம்: கனன், சாப் வகைகளுக்கான உதிரிப்பாகங்கள்.

***சேவைகள்:***

01. அச்சிடுதல்.
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
03. மோட்டோர் வாகனங்கள் திருத்தம்.
04. ரியூப் ஒட்டுதல்.
05. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்.
06. ஏற்றியிறக்கல் வேலைகளுக்கும், பாரம் குறைந்த வாகனங்களும் வாடகைக்கு விடுதல். (சுத்திகரிப்பு, வேலைப் பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்டர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்.
08. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
09. ஏற்றியிறக்கல் தொடர்பாக மாட்டு வண்டியை சேவைக்கு அமர்த்துதல்.
10. மின்கலங்களுக்கு மீள் மின்வலுவூட்டல்.
11. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.
13. கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் "வழங்கல்கள் சேவைகள் 2003ஆம் ஆண்டு" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால்மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கவேண்டும்.

வழங்கல்களுக்கும், தேவைகளுக்குமான விண்ணப்பங்கள் 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவு பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக (ரூபா 250/-, வற் ரூபா 50/-) ரூபா 300/- பெறுமதியான காசுக் கட்டளை/தபால் கட்டளையை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலை நாள்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*11.11.2002* (சி-24857)

**இ.இராமலிங்கம்,**
*மாநகர ஆணையாளர்,*
*மாநகர்சபை, யாழ்ப்பாணம்.*




**இலங்கை வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை 25 வருட சேவை பூர்த்தி விழாவை நேற்றுமுன்தினம் கொண்டாடியது.**

**இந்த நிகழ்வில் நீண்டநாள் வாடிக்கையாளர் சி.தா.செல்லத்துரை மங்கள விளக்கேற்றுவதையும் சட்டநாதர் சிவன்கோவில் பிரதமகுரு தானு. வாசுதேவகுருக்கள், பிரதம விருந்தினரும் உதவிப் பொது முகாமையாளருமாகிய க.பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.**

**மூத்த வங்கி சட்டத்தரணி சி.கனகரத்தினம், மாவட்ட முகாமையாளர் சி.நடராஜலிங்கம், மேற்றரக்கிளை முகாமையாளர் சி.விக்னராஜா ஆகியோரும் படங்களில் உள்ளனர்.**

## தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியருக்கு!

தென்மராட்சி,நவ.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி மட்டுவில் தேனொளி முன்பள்ளி நிலையத்தில் நடைபெறுமென வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## தாய்வான் குழுவால் 35 பேருக்கு நேற்று சிகிச்சை

யாழ்ப்பாணம்,நவ.13

தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ ரி சூயு தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ்.வந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர்களினால் நேற்று 35 பேருக்கு கண்சிகிச்சை அளிக்கப்பட்டது.

இன்று கூடுதலான கண் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-8)

## யாழ்.பல்கலைக்கு மருந்து கொள்வனவு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.பல்கலைக்கழக சுகாதார மருத்துவ நிலையத்திற்கு சுமார் 87 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் உரிய காலத்தில் தேவையான மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செயயாததைக்கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தியமை தெரிந்ததே. (ஒ-5)

## தொழில் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.13

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமாக்கப்பட்ட தொழில்துறைத் திணைக்கழத்தின் நெசவு நிலையம் மற்றும் விற்பனை நிலையத்தைப் புனரமைப்பதற்கென சுமார் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதியினை வடக்கு கிழக்கு மாகாண தொழில்துறை திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தொழில்துறை திணைக்கள மாவட்ட அலுவலர் பி.இராகவன் தெரிவித்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பண்ணாகம் நெசவு நிலையப் புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆரியகுளம் தொழில்துறை திணைக்கள விற்பனை நிலையப் புனரமைப்புக்கென 50 ஆயிரம் ரூபாவும் வடக்கு கிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

**தவறிவிட்டது**

லங்கெம் நிறுவனத்திற்குச் சொந்தமான **WP GU 9950** இலக்கமுடைய **HERO HONDA DAWN** மோட்டார் சைக்கிளின் நடப்பு ஆண்டு வரி, காப்புறுதிச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை என்பன காணமற்போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் **சிவா பிறதர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்துதவவும். (10573)

# இலங்கை வங்கிக் கிளையின் வெள்ளி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் 2ஆவது கிளையின் 25 வருட சேவைப் பூர்த்தியின் வெள்ளிவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வங்கியின் முகாமையாளர் என்.சிவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராகப் பதவியேற்றுள்ள க.பாலசுப்பிரமணியம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக இக்கிளையின் முதலாவது முகாமையாளர் முத்துமணி கனகரட்ணம், மாவட்ட முகாமையாளர் சி.நடராஜலிங்கம், இலங்கை வங்கியின் யாழ்.மேற் தரக் கிளையின் பிரதான முகாமையாளர் எஸ்.விக்னராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் உரையாற்றிய பிரதம விருந்தினர் தனது உரையில் - வாடிக்கையாளர்கள் எமக்கு வழங்கும் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனுமே இன்று இவ் வங்கி தனது 25 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. ஆகவே, எமது வாடிக்கையாளர்களை நாம் மறந்துவிடமுடியாது. தொடர்ந்தும பல நவீன முறைகளை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு பல சேவைகளை வழங்கவுள்ளோம். அதற்கு வாடிக்கையாளர்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனத்தெரிவித்தார்.

இவ் வங்கியில் தொடர்ந்து 25 வருடங்கள் வாடிக்கையாளர்களாக இருந்துவந்த வே.நடேசபிள்ளை, சி.தா. செல்லத்துரை ஆகியோரும் இந நிகழ்வில் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-8)

# கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கும் கலைநிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.13

தமிழ் இலக்கிய கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கை கலைக்கழக தமிழ் இலக்கியக் குழு நடத்தும் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்கும், கலை நிகழ்வுகளும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்த மூன்று நாள் கருத்தரங்கில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், பல்துறைத் திறனாய்வு எனப் பல்வேறு விடயங்கள் பற்றி தினமும் இரண்டு அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளைமறுதினம் இடம்பெறவுள்ள ஆரம்பநாள் நிகழ்வு தமிழ் இலக்கியக்குழுத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் தலைமையில் நடைபெறும். இதில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் இலங்கை கலைக்கழகத தலைவர் பேராசிரியர் அநுராதா செனவரத்தின கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஆரம்பநாள் நிகழ்வுகள் காலை 9 மணிமுதல் இடம்பெறும். இதனைத தொடர்ந்து காலை 9.45 மணிமுதல் முற்பகல் 10.30 மணிவரை சிறுகதை அமர்வு கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு தலைமையில் நடைபெறும்.

பிற்பகல் 1.10 மணிமுதல் 2.45 மணிவரை நாவல் பற்றிய அமர்வு கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும். மாலை 5 மணிமுதல் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஒ-5)

## பன்றியை பொதுமக்கள் கொன்றனர்

தென்மராட்சி,நவ.13

மிதிவெடியில் இரு கால்களையும் இழந்த பன்றி ஒன்று நேற்றுக் காலை பொதுமக்களால் துரத்தி அடித்துக் கொல்லப்பட்டது. இச்சம்பவம் சரசாலையில் இடம்பெற்றது.

70 கிலோ நிறையுடைய இப்பன்றியின் முன்னங்கால்கள் இரண்டும் அரைவாசி துண்டிக்கப்பட்டு முடமாகக் காணப்பட்டன. அண்மைக்காலமாக இப்பகுதியில் விவசாயப்பயிர்களை இப்பன்றி அழித்து வந்தது.

அண்மையில் மட்டுவில் பகுதியில் இப்பன்றி முட்டிமோதியதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி அழைப்பும்**



திருமதி
குமாரசாமி பொன்னம்மா
மண்ணில் விண்ணில்
1932-03-11 2002-10-14
**திதி: 2002-11-13**

அன்பின் பிறப்பிடமாய்த் திகழ்ந்த அன்னையே!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தின்றோம்.

எமது குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்தும், தோளோடுதோள் நின்று உதவியும், அனுதாபங்களை நேரிலும் தொலைபேசியிலும் தெரிவித்தும் சகல வகையிலும் எங்களோடு ஒன்றித்த உள்ளங்களுக்கு எம் உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (13.11.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (10574)

**கணவர் க.குமாரசாமி,**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



பருத்தித்துறை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மழைய மாண வர் சங்கத்தால் நடத்தப்படும் அனாதைச் சிறுவர்களுக்கான பாமதி கருணை இல்லத்துக்கு விஜயம் செய்த தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலய சுவாமி ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் அனாதைச்சிறார்களுக்கு உணவு ஊட்டுவதைக் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

## மிருசுவில் மனிதப் படுகொலைகள்:

# 5 இராணுவ அதிகாரிகளை ஆஜராக கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

மிருசுவில் மனிதப் படுகொலை கள் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஐந்து இராணுவ அதிகாரிகளுக்கு உத் தரவிடப்பட்டிருக்கிறது.

நீதிபதிகளான எஸ்.ஏ.இமாம், எரிக் பஸநாயக்க, குமார் ஏக்கரட்ண ஆகியோரைக் கொண்ட மேல் நீதி மன்றமே இந்த உத்தரவைப் பிறப் பித்தது.

ஐந்து இராணுவ அதிகாரிகளும் எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன் றத்தில் ஆஜராகவேண்டுமென உத்த ரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ)

# புனித யாகப்பர் தேவாலயத்தில் மௌனித்துப்போன உயிர்கள்

**யாழ். குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தில் 93ஆம் ஆண்டு இதே தினத்தில் இடம்பெற்ற குண்டுவீச்சில் உயிரிழந்த 9 பேரின் நினைவாக இன்று மேற்படி தேவாலயத்தில் விசேட ஆராதனை இடம்பெறுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிர சுரமாகிறது.**

இன்றைய நாளில் இருந்து சரி யாக ஒன்பது வருடங்களுக்கு முன் னர்....

1993 நவம்பர் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை...

புதிய நாளொன்றின் விடியலில் குருநகர் மக்கள் விழித்தெழுந்து தமது வாழ்க்கையை ஆரம்பித்தார் கள். காலை 7.15 மணியளவில் குடாக்கடல் ஊடாக வான்பரப்பில் சுப்பர் சொனிக் விமானம் பேரிரைச்ச லுடன் குருநகரை நோக்கிப் பறந்த வாறு வந்துகொண்டிருந்தது.

விமானம் வருவதைக் கண்டு அதன் பெரும் இரைச்சலைக் கேட்ட குருநகர் மக்கள் தமது நாளாந்தக் கடமைகளை மறந்தது பாதுகாப்புத் தேடி ஓடினார்கள். வீதிகளில் சென்று கொண்டிருந்தவர்கள் அருகிலுள்ள இடங்களில் இருந்த பாரிய கட்ட டங்களின் கீழும், கழிவுநீர் செல் லும் வாய்க்கால்களினுள்ளும் இறங் கிக்கொண்டார்கள்.

குருநகர் யாகப்பர் ஆலயத்தின் முன்னால் உள்ள வீதிகளில் சென்ற பலர் தேவாலயம் பாதுகாப்புத் தரும் என்ற நம் பிக்கையில் ஆலயத்தினுள் ஓடிச்சென்றனர். சிலர் ஆலயத் தின் வெளிப்புற மதில்கரை யோரமாகவும் பதுங்கிக்கொண் டனர்.

யாழ்ப்பாணத்தின் கரையோ ரத்தைச் சுற்றி பல தடவை வட்டமிட்டு மக்களைப் பய முறுத்திய அவ்விமானம் 7.20 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மேலாகப் பறந்துவந்து தாழப் பதிந்த வாறு பேரிரைச்சலுடன் இரு எரிகுண்டுகளை வீசியவுடன் மேலெழுந்து குடாக்கடலின் மேலாக தான் வந்த இடத்தை நோக்கிப் பறந்து சென்றது.

விமானத்தின் ஓசை அடங் கியதும் பயப்பிராந்தியில் இருந்து விடுபட்ட குருநகர் மக் கள் தமது பாதுகாப்பு இடங் களை விட்டு வெளியேறி விமா னத்தைப் பார்த்தபோது வட மேற்குமூலைப் பக்கமாகக் கரும்புகை எழுவதைக் கண்ட னர்.



**சுப்பர் சொனிக் விமானக் குண்டினால் சேதமடைந்த யாகப்பர் ஆலயம். இந்த இடத்திலேயே நீதிக்கும் சமாதானத்துக் குமான ஆலயம் தற்போது கட்டப்பட்டுள் ளது.**

யாழ்.போதனா வைத்திய சாலையின் மீதுதான் குண்டு வீசப்பட்டதோ என அறிய மக்கள் விரைந்து வீதிகளில் வந்த போது யாகப்பர் ஆலயப் பகுதியி லிருந்து புகைவருவதைக் கண்டு அவ்வாலயத்துக்கு ஓடிச் சென்றார் கள்.

அந்தோ.... குருநகர் மக்கள் காலங்காலமாக சிறுகச்சிறுகச் சேமித்துக் கட்டிய - 132 ஆண்டுகள் பழைமைவாய்ந்த - குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சிதைவடைந்து சின்னாபின்னமாகக் காட்சியளித்தது. தமது இதயமே வெடித்துச் சிதறிய நிலையில் இடிபாடுகளை அகற்றுவதி லும் ஆலயத்தில் தஞ்சமடைந்த மக் களைத் தேடுவதிலும் ஈடுபட்டனர்.

இத்தேடுதலின்போது உருக் குலைந்து உயிரிழந்த குருநகர் மக் கள் எண்மரது உடலையும் படுகாய மடைந்த ஒருவரையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.

கபிரியேல் அன்ரன் (வயது 40), யோண் வெண்ணிலா (வயது 24), சிங்கராயர் கணோஜி (வயது 08), அன்ரன் புஸ்பலீலா (வயது 30), எஸ். பேபி (வயது 45), குருசுப்பிள்ளை அக்கினேஸ் (வயது 80), கி.சிந்து (வயது 02), க.சேவியர் (வயது 55) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட் டன. இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குருசுப்பிள்ளை அருள் நாயகம் (வயது 45) சிகிச்சை பயன ளிக்காது ஒரு மாதத்தின் பின்னர் இறந்தார்.

இக்கொடூரத் தாக்குதல் காரண மாக ஆலயத்தின் உட்பகுதியில் வைக்கப்பட்டிருந்த தேவநற்கரு ணைப் பேழை உடைந்து திவ்விய சற்பிரசாதம் தரையில் சிந்தியது. ஆலய வளவில் அமைந்திருந்த பங் குத் தந்தையின் இல்லமும், புனித யாகப்பர் ஆலய மண்டபமும் சேத மடைந்தன. பங்குத் தந்தையின் இல் லத்தின் முன்னால் ஆலய வளவில் வளர்ந்திருந்த மலைவேம்பு மரமும் வேருடன் பிடுங்கியெறியப்பட்டிருந் தது.

**குருநகர் செய்தியாளர்**

அச்சமயம் குருநகர் பங்குத்தந் தையாக இறைபணிபுரிந்த வண.பிதா ஆர்.எம்.ஜி.நேசநாயகம் அடிகளாரின் முயற்சியினால் ஆலயம் புனர்நிர்மா ணம் செய்யப்பட்டு கடந்த 95ஆம் ஆண்டு யாழ்.ஆயரால் ஆசீர்வதிக் கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

அன்றைய குண்டு வீச்சில் இறந் தவர்கள் நினைவாகவும், தாக்குதல் நாளை நினைவு கூருமுகமாகவும் இன்று புதன்கிழமை 5 மணிக்கு இவ் வாலயத்தில் விசேட வழிபாடு நடை பெறவுள்ளது. குண்டு விழுந்து வெடித்த இடத்தில் அமைக்கப்பட் டுள்ள நீதிக்கும் சமாதானத்துக்கு மான ஆலயமும் திறந்துவைக்கப் படும். ★

# புதிதாய் வந்திருக்கும்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எழுதுபவற்றை அதற்கென தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருள் ரெக்ஸ்ற்(Text)ஆக மாற்றி சேமித்துக் கொள்ளும் (Save). எமக்கு அப்படித் தேவையில்லை என்றால் நாம் எப்படி எழுதினோமோ அப்படியே - அந்த வடிவத்திலேயே - சேமித்துக்கொள் ளும். தேவைக்கேற்றவாறு, வசதிக் கேற்றவாறு செய்துகொள்ளலாம்.

கணனியின் எழுதுகருவியை (Pen) இயக்கி நாம் எழுத ஆரம்பித் ததும், நாம் எழுதுபவற்றில் 60 முதல் 80 சதவீதமானவற்றை கணனி உடன டியாகப் புரிந்து கொள்ளும் ஏனைய வற்றை கொஞ்சம் கொஞ்சமாக - சற்று நேரமெடுத்து - புரிந்துகொள் ளும் என்கின்றார் பிரிட்டனின் வின் டோஸ் தயாரிப்பு, விற்பனை நிறுவனம் ஒன்றின் முகாமையாளரான நீல் லேவர் (Neil laver) புரிந்துகொள்ள முடியாத சொற்களை தனது சொற் களஞ்சியத்தை (Dictionary) பயன் படுத்தி கணனி புரிந்துகொள்ளும் என்றும் அவர் சொன்னார்.

நாம் விரும்பிய வகையில் எழுதிக் கொள்வதற்காக 100க்கும் மேற்பட்ட கையெழுத்து வடிவங்கள் (Style) உரு வாக்கப்பட்டுள்ளன. அவற்றில் நமக் குத் தேவையானதை, நமது கையெ ழுத்தை ஒத்த வடிவத்தை தேர்ந்தெ டுத்து, அதனைப் பயன்படுத்தலாம்.

விசைப் பலகைகளுடன் கூடிய லப்ரொப்பைப் பயன்படுத்துவதற்குக் கடினமான இடங்களில் 'ரப்லெற்' மிக வும் பயனுள்ளதாக இருக்கும் என் கிறார் லேவர்.

ஐந்துக்கும் மேற்பட்ட கணனி உற் பத்தி நிறுவனங்கள் இந்த புதிய 'ரப்லெற்' கணனிகளை அறிமுகப்படுத் தியுள்ளன. சில நிறுவனங்கள் அடுத்த வருடம் அறிமுகப்படுத்தவுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் வீழ்ச்சி யடைந்த, தனிப்பயன்பாட்டுக் கணனி களின் (PC) விற்பனையை இந்த புதிய வரவு மீண்டும் உயர்த்தும் என்று உற் பத்தி நிறுவனங்கள் கருதுகின்றன. மைக்ரோ சொவ்ற் நிறுவனமும் இந்த திட்டத்தில் இணைந்துள்ளது.

'ரப்லெற்' கணனியின் எதிர்கால அபிவிருத்திக்காகவும் ஆய்வுகளுக் காகவும் தனது நிறுவனம் 40கோடி அமெரிக்க டொலர்களை ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக மைக்ரோசொவ்ற் நிறுவன அதிபர் பில்கேட்ஸ் தெரிவித் துள்ளார். இந்த நிதி 'ரப்லெற்'றின் பற்றரியின் பாவனைக் காலத்தை அதி கரிப்பது, மைக்ரோபுரோஸஸர், திரை (Screen) ஆகியவற்றின் அபிவிருத்தி மற்றும் இதர தொழில்நுட்ப முன்னேற் றம் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப் படும் என்றும் அவர் சொன்னார்.

கம்பியில்லா தொலைத் தொடர்பு வலைப்பின்னலுடன் (Wireless net work) 'ரப்லெற்'றை இணைப்பது குறித் தும் ஆய்வுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. விரைவிலேயே அது சாத் தியமாகும் என்ற நம்பிக்கை இருக்கின் றது.



இந்த 'ரப்லெற்'றின் விலை 1,700 முதல் 2,000 அமெரிக்க டொலர் வரை யில் இருக்கின்றது. இது தற்போது பாவனையில் உள்ள லப்ரொப் கணனி களைவிட சில நூறு டொலர்கள் அதி கம்தான்!. ஆனால், அவற்றைவிட அதிக செயற்திறன் வாய்ந்தது; வசதி யானது.

வைத்தியர்கள்; வழக்கறிஞர்கள் போன்றோரே இந்த வகைக் கணனி களின் விற்பனையில் முதல் இலக்கு.

அதிமுக்கிய சத்திரசிகிச்சை செய் யும்போது சில அவசர குறிப்புக்களை செயற்படுத்துவதற்கும், தொலைதூர சத்திரசிகிச்சைகளின் போது அவசர குறிப்புக்களை ஈ-மெயிலில் செய்வதற் கும் இவை பெரிதும் உதவியாக இருக் கும் என்று கருதப்படுகின்றது.

அதாவது சத்திரசிகிச்சை செய்து கொண்டிருக்கும் நிபுணர் ஒருவர் கிடைக்கும் சில செக்கன்கள் இடை வெளியில் 'ரப்லெற்' கணனித் திரையில் தேவையான குறிப்புக்களை கிறுக்கி விட்டு தனது பணியை இடையூறு இன் றித் தொடரலாம்.

இப்போது அத்தகைய சந்தர்ப்பங் களில் லப்ரொப் கணனிகளோ அல்லது கணனியுடன் கூடிய இயக்குநர் ஒரு வரோ சத்திரசிகிச்சையின் போது அருகே இருப்பது அவசியமாகின்றது. எதிர்காலத்தில் இத்தகைய அவசியம் எதுவும் இருக்காது.

லண்டனில் உள்ள ரோயல் புறொம்ப ரன் மருத்துவமனையில் (Royal Bro -mpton Hospital) மைக்ரோசொப்ட் நிறுவனம் இந்தக் கணனிகளை இத்த கைய பரிசோதனைக்கு உட்படுத்தி யுள்ளது.

அதுபோன்றே வழக்கறிஞர்களும் நீதிமன்றங்களில் அவசர குறிப்புக் களுக்கு இனி உதவியாளர்களையோ லப்ரொப் கணனிகளையோ நம்பவேண் டியதில்லை. தாளில் குறிப்பெழுதுவது போன்று 'ரப்லெற்' கணனிகளிலேயே தமது குறிப்புக்களை அவசரமாகக் கிறுக்கி வைத்துக்கொண்டால் பின் னர் சாவகாசமாக அவற்றை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்த மாதிரியான செயற்பாடுக ளால் 'ரப்லெற்' கணனிகள் பரவலாகப் பாவனைக்கு வரும்போது ஏனைய கணனிகளின் பாவனை குறைவடைந் துவிடும் என்கின்றார் ஹியூலெற் பக்காட் (Hewlett-Packrd) கணனி உற்பத்தி நிறு வனத்தின் நிறைவேற்று அதிகாரியான கார்லி பொரினா. இதன் தொழில்நுட்ப வசதிகள் மேலாக மேலாக அதுவே மனித வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்றும் அவர் கூறுகின்றார்.

இதனை ஏற்றுக்கொள்ளும் லேவர் 'ரப்லெற்'றின் பாவனை அதிகரிக்கும் போது மனிதர்களின் வாழ்க்கைமுறை பெரிதும் மாற்றமடையும் என்று கூறு கின்றார். அவர்களின் வேலைகள் புதிய பல வழிகளின் செல்லலாம் என் றும் அவர் சொல்கின்றார்.

அதாவது இனிமேல் பலர் தமது வேலையில் அரைவாசியை அலுவ லக நடைபாதையில் (Corridor) நடக் கும் போதே முடித்துவிடுவார்கள். ஏனெ னில், அவர்களது கைகளில் இந்த எழுதும் வசதி கொண்ட மின்னியல் கொப்பி (Writing electronic notes) இருக்கும். இந்தக் கணனிகளுக்கான வயர்லஸ் இணைப்பு வசதிகிடைத்த தும் அவற்றின் ஆக்கிரமிப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

நல்லது!

இப்போது கற்பனையில் நீங்கள் நடைபாதையில் நடந்துகொண்டிருந்த போது உங்கள் கைகளில் இருந்த மின்னியல் பொருள் என்னவென்பது புரிந்ததா? அதை மட்டும் புரிந்துகொள் ளுங்கள்; அதில் மேலும் சொல்லப் பட்டவற்றை மறந்துவிடுங்கள். (நமக் கேன் வம்பு) ஆனால், அத்தகைய கணனி வசதிகள் எமக்கு எப்போது கிடைக்கும் என்று ஆண்டவனுக்கு மட்டும்தான் தெரியும்.

என்ன விநோதம் பாருங்கள் மனித னின் வாழ்க்கை மொத்தத்தில் 'ரப்லெற்' றிலேயே தங்கிவிட்டது. கணனியிலும் சரி நோய்களுக்கான 'ரப்லெற்'றிலும் சரி மனிதன் நிலை இதுதான் என்றாகி விட்டது. ★

## கரவெட்டிப் பகுதியில்

# வீட்டில் முகாமிட்டிருந்த படையினர் வெளியேறினர்

வடமராட்சி,நவ.13

கரவெட்டி யார்க்கருவில் தனியார் வீடொன்றில் முகாமிட்டிருந்த படை யினர் அங்கிருந்து வெளியேறியுள் ளனர்.

கடந்த 1996ஆம் ஆண்டு படை யினர் குடாநாட்டைக் கைப்பற்றிய போது யார்க்கருவுக்கு அருகிலுள்ள ஆயாம் சந்தியில் தடைமுகாம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர். தடைமுகாமின் கடமையில் ஈடுபடுவதற்கு வசதியாக யார்க்கரு வீடு ஒன்றில் படையினர் தங்கியிருந்தனர்.

படையினர் குறிப்பிட்ட வீட்டி லிருந்து வெளியேறியபோதும் ஆயம் சந்தியிலுள்ள தடைமுகாமில் இரா ணுவத்தினரும், பொலீஸாரும் கடமை யில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-173)

## பிரதேசத் தலைவர், மாணவன் கொலைகள்:

# ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க 4 அமைச்சர்கள் குழு நியமனம்!

வலஸ்வாவிட்ட பிரதேச சபைத் தலைவர், அவரது சாரதி கொலை கள், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக மாணவக் கொலை ஆகியவை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர் ப்பிக்க நான்கு அமைச்சர்கள் கொண்ட ஒரு குழுவை பிரதமர் ரணில் விக் கிரமசிங்க நியமித்திருக்கிறார்.

விவசாய, கால்நடைவள, சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா, கல்வி, கலாசார அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு, பாடசாலை கள் அபிவிருத்தி அமைச்சர் கரு நிமல ராஜபக்ஷ, மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சர் கபீர் ஹாசிம் ஆகியோர் இக்குழுவில் அடங்குவர்.

இக்கொலைகள் தொடர்பாக ஜே.வி.பி. மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அவை குறித்து அமைச்சர்கள் குழு குறிப் பாக ஆராயும் என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அமைச்சர்கள் குழு தனது அறிக் கையை பிரதமரிடம் கையளிக்கும். (ம)

# தாய்வான் குழுவினர் மாநகராட்சி விஜயம்

யாழ்ப்பாணம்,நவ.13

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ ரி சூயு தலைமையிலான குழுவினர் அன்றையதினம் யாழ்.மாநகரசபை அலுவலகத்துக்குச் சென்று முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளனர்.


இதன்போது மாநகரசபையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி வழங்குமாறு மேற்படி குழுவிடம் கேட்கப்பட்டது. இதற்கு தாம் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்குவதாகவும் ஆயினும், அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவது பற்றிப் பரிசீலிப்பதாகவும் தாய்வான் குழுவினர் பதிலளித்தனர்.

கலந்துரையாடலின் இறுதியில் மாநகரசபைப் பகுதியில் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய திட்ட அறிக்கை ஒன்று மேற்படி குழுவிடம் கையளிக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்து உதவி வழங்கக் கூடிய திட்டங்களைத் தெரிவு செய்வதற்காகவே இத்திட்ட அறிக்கை தாய்வான் குழுவினரிடம் வழங்கப்பட்டது.

(ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.A.P.குகதாஸ்

(B.Com.)

*(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

அவர்கள் கடந்த 23.08.2002 அன்று சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையினை இட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு, அவர் நீண்டகாலம் வாழ்ந்து மேலும் பல பதவிகளைப் பெற்று மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.* (10568)

சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்



## யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்
## பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17.11.2002 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அன்று புதிய யாப்பு அங்கீகாரமும், அதனடிப்படையில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெறும். சகல பழைய மாணவர்களையும் சமுகந்தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- கௌரவ செயலாளர்.

(10565)



## PATRICIAN INSTITUTES

2001/2002 தொழில்நுட்பப் பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கான அறிவித்தல்

### சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

மேற்படி நிகழ்வானது எதிர்வரும் 16.11.2002 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து மாணவர்களையும் சமுகந்தந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சான்றிதழ்கள் யாழ்.ஆயர் அவர்களினால் வழங்கப்படும் என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*சான்றிதழ் பெறும் மாணவர்களின் கவனத்திற்கு:*

எல்லோருக்கும் தனிப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறாதவர்கள் உடன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**Registrar,**
**Patrician Institutes**
*59, St.Patrick's Road,*
*Jaffna.*

(சி-24854)


## பல்கலைக்கழக மாணவன் கொலை தொடர்பாக 18 பேர் கைது!

கொழும்பு,நவ.13

கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகப் பட்டதாரி மாணவர்கள் 18 பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் -

மேலும் 10 பேரைத் தாங்கள் தேடிவருவதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு ஜே.வி.பியுடன் தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

(ஒ-4)

## பசுவைத் திருடும் முயற்சி நாய்களின் குரைப்பால் தோல்வியடைந்தது!

இணுவில்,நவ.13

கோண்டாவில் வடக்குப் பகுதியில் பசு மாடு ஒன்றைத் திருடும் முயற்சி கைகூடாமல் போயுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மா.தம்பித்துரை என்பவரின் பதினையாயிரம் ரூபா பெறுமதியுள்ள பசு மாடே திருட்டு முயற்சியில் இருந்து தப்பியிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாட்டுத் தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த பசு மாட்டை அடையாளம் தெரியாத சிலர் அவிழ்த்துச் சென்றதாகவும் -

அப்போது நாய்கள் குரைக்கவே அயலவர்கள் விழிப்படைந்ததாகவும் -

இதனால் திருடர்கள் பசு மாட்டைக் கைவிட்டு தப்பியோடிவிட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## ஒப்பந்தத்தின் பின்னர் 500 கைதிகள் விடுதலையாம்!

கொழும்பு,நவ.13

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் இதுவரை 500 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் தற்பொழுது 225 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் -

இவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு அவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் -

சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

## போக்குவரத்து நெருக்கடி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.நகரப் பகுதியில் நடைபாதையோரக் கடைகள் உட்பட போக்குவரத்து நெருக்கடிக்கான காரணங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் முதல்வர் செ.கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஒட்டோ உரிமையாளர் சங்கம், மினிபஸ் உரிமையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பெரியகடை மரக்கறிச் சந்தையின் குத்தகையாளர் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)



சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலன்புரிச் சிறுவர் நன்னடத்தை திணைக்களம் நடத்திய சிறந்த சிறுவர் இல்லங்கள் தெரிவில் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லம் யாழ்.மாவட்டத்தில் தெரிவானது. இதற்கான கேடயத்தை நல்லூர் பிரதேச செயலர் நா. வேதநாயகன் சிறுவர் இல்ல நிர்வாகப் பொறுப்பாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸிடம் வழங்குவதைப் படத்திற் காணலாம். (எ-180)


பவளவிழாக்காணும் உரும்பிராய்ப் பேராசான்

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களுக்குப்

## பிறந்ததின வாழ்த்து 13-11-2002

உரும்பை நகரதனில்
ஊருணி போல் உதித்தமணி!
ஆசிரியமணி பஞ்சாட்சரம்
அகிலம் போற்றும் பெருமணி!
பவளவிழாக் கண்டு நிற்கும் இம்மணியை
பல்லாண்டு காலம் சிறப்புடனே வாழ்ந்திட
கருணாகரன் பாதந்தனைத் தொழுது
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (10523)

அன்பு மகள்:
செல்வி வாசுகி பஞ்சாட்சரம்.



## சேவை நலன் பாராட்டு

எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியரும், பிரதி அதிபருமாகிய

### உயர்திரு.மா.ஞா.சேவியர்



அவர்கள் அகவை அறுபதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுகின்றார்.

செயற்திறன்மிக்க பிரதி அதிபராகவும், கணித நுண்ணறிவு மேதையாகவும், ஆத்மீக அறிஞராகவும் விளங்கி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஒருங்கே அமையப் பெற்றவருமாகிய யா/புனித மரியாள் வித்தியாலயத்தில் (O.L.R.) 1999 தொடக்கம் 2002 நவம்பர் 12 வரை அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கும்முகமாக அவரை வாயார வாழ்த்தி, மனதாரப் பாராட்டுவதில் நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

பாடசாலைக் கல்விச் சமூகமும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்.

(10558)



## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
## 6 ஆம் தரத்திற்கான அனுமதி - 2003

கல்லூரியில் 6ஆம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 30.11.2002

6ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும்போது நன்கொடைகள் அறவிடப்படமாட்டாது.

*யா/வைத்தீஸ்வராக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்.* (சி-24855)

- அதிபர்.



## 2ஆம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில்
09
-
03
-
1908



விண்ணில்
05
-
11
-
2000

ஆயிரம் பிறைகண்ட பேராளன் காங்கேயனூர் அமரர்

### கோவிந்தர் சின்னத்தம்பி (D.A.M. RIMP)

*(சித்த வைத்திய கலாநிதி, ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலய அறங்காவலர்)*

திதி: நவமி 13.11.2002

பார்பரவு பராசக்தி அம்மை நிழல்
பரவி நிதம் சுகம் கண்ட பண்பின் தந்தை!

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.* (10563)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## முக்கிய அறிவித்தல்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு CFL பல்புகளும் உண்மையில் 80% மின்சாரச் செலவைச் சேமிக்கின்றனவா!!! CFL வாங்கும்போது கவனத்திலெடுக்கப்பட வேண்டியவை.

1. இலங்கை மின்சார சபை (CEB) இலகு தவணைத் திட்டத்தில் அங்கீகாரம் பெற்றவையா?
2. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு CFL பல்பும் ஆகக் குறைந்தது ஒருவருட உத்தரவாதம் உடையவையா? அத்துடன் உத்தரவாத அட்டை அளிக்கப்படுகின்றதா?
3. நீங்கள் வாங்கும் CFL வகை சர்வதேச தரச் சான்றிதழ்கள் பெற்றவையா?
4. நியாயமான விலையில் கிடைக்கின்றனவா?

இவற்றிற்கு திருப்திகரமான விடைகளை அளிக்காத எந்த CFL பல்பும் உங்கள் மின்சாரத்தை வீணடிப்பது மட்டுமன்றி உங்கள் பணத்தையும் விரயமாக்குகின்றது.

இதனை வழங்கியோர்:

PRESIDENT®
இலங்கைப் பிரதிநிதிகள்

President CFL பல்புகள், CEB இலகு தவணை திட்ட அங்கீகாரம் பெற்றவை.

உதயன்

## கடற்படைகள் - கடற்புலிகள் இன்று முக்கிய சந்திப்பு

அரசின் கடற்படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலித் தளபதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று இடம்பெறுகின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கடற் போராளிகளும் கடற்படையினரும் ஒரு மேசையில் அமர்ந்திருந்து பேச்சு நடத்தப்போவது இதுவே முதல் தடவை. அதனால் இது மிக முக்கிய - சரித்திரபூர்வ - சந்திப்பாக அமைகின்றது.

இந்தச் சந்திப்பில் புலிகளின் கடற்புலித் தளபதி சூசை நேரடியாகப் பங்குபற்றுவார் எனத் தெரிகின்றது.

இலங்கைக் கடற்படையும் தனது மூத்த அதிகாரிகள் இருவரை இந்தச் சந்திப்புக்காக அனுப்புகின்றது.

கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தி மற்றும் ரியர் அட்மிரல் சரத் விரசேகர ஆகியோர் கடற்படைத் தளபதியின் சார்பில் இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுகின்றனர்.

தற்போதைய சமாதான முயற்சிகள் மெல்ல - அதேநேரம் திடமாக - முன்நகர்ந்து கொண்டிருக்கின்றன. என்றாலும், அதில் அவ்வப்போது பின்னடைவுகள் ஏற்படாமல் இல்லை. மோதல்கள், தாக்குதல்கள், கைதுகள், மாறி மாறித் தடுத்து வைப்புகள் என்று இருதரப்புக்களுக்கும் இடையில் ஆங்காங்கே பிணக்குகள் ஏற்படாமல் இல்லை. இத்தகைய பிணக்குகள், சச்சரவுகளில் அநேகமானவை கடலில் நடப்பவை; கடற்படைக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெறுபவை.

அமைதி முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் முக்கிய சக்தியாக அரசுத் தரப்பில் கடற்படையே விளங்குகின்றது என்ற சந்தேகம் - அபிப்பிராயம் - தமிழர்கள் தரப்பில் நிலவாமல் இல்லை.

தீவுப்பகுதி கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கும் அடிக்கடி பிரச்சினைகள்.

இதுதவிர, மீனவர்கள் பிரச்சினைகள் வேறு. தமழர் தாயகத்தின் பெரும் பகுதி கடலோரத்தைக் கொண்டது. இலங்கையின் மூன்றில் இருபங்கு கடலோரப் பிரதேசம் தமிழர் தாயகத்தில் தான் உள்ளது. இந்தப் பிரதேசத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் தமிழ் மீனவர்கள் தொழில் செய்யவிடாமல் தடுக்கப்படுகின்றார்கள்; தாக்கப்படுகின்றார்கள்; உடைமைகள் நாசமாக்கப்படுகின்றன. தொழில் இன்றி - ஜீவனோபாயத்திற்கு வழியின்றி - தமிழர் தாயகத்தில் பல்லாயிரக் கணக்கான மீனவக் குடும்பங்கள் அல்லலுறுகின்றன.

இவ்வாறு தமிழர்கள் மீது கெடுபிடிப் போக்கைக் கட்டவிழ்த்துவிட்டு, சமாதான முயற்சிகளைக் கெடுக்கும் விதத்தில் கடற்படை செயற்படுவதாகக் கருதப்படுகின்றது. அதன் தளபதிக்கு வழமைக்கு முரணாக - எல்லோரும் அதிசயப்படத்தக்க விதத்தில் - மூன்று ஆண்டுகால சேவை நீடிப்பை ஒரேயடியாக - தடாலடியாக - வழங்குகின்றார் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு வேட்டு வைக்கக் காத்திருப்பவர் என்று கருதப்படுகின்ற ஜனாதிபதி குமாரதுங்க.

இத்தகைய சந்தேகப் பார்வைகளுக்கு ஆப்பு வைத்து - சமாதான முயற்சிகளுக்கு மேலும் உரமேற்றும் வகையில் - இன்றைய சந்திப்பும் அதன் விளைவுகளும் திகழ வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

கடற்படையினரின் கெடுபிடிகள், அதனால் தீவுப் பகுதியில் பொது மக்களும், தமிழர் தாயகத்தில் முழு மீனவர்களும் அடையும் துன்பங்கள் என்பன எமது மக்களின் அன்றாட - வாழ்வியல் - பிரச்சினையாகும்.

அரசியல் பிரச்சினைகளுக்கு முன்பு - விரைந்து - அவசரப்பட்டு - தீர்வு காணப்படவேண்டிய அன்றாட விவகாரமாகின்றது இது.

இன்று முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடைபெறும் கடற்படை - கடற்புலிகள் சந்திப்பு இத்தகைய அன்றாடப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழிவகைகளைக் கண்டுபிடிப்பதாக அமையவேண்டும்.

சமாதான முயற்சிகள் மேலும் வீறுகொண்டு தொடர்வதற்கு சந்திப்பின் பெறுபேறு ஊக்கமளிப்பதாகவும் அமையவேண்டும்.

# வாக்காளர் இடாப்பு பிரதிபெறும் நடைமுறை குறித்து அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.13

வாக்காளர் பதிவேட்டுப் பிரிப்பிதழ் ஒன்றைப் பெறுவதற்கான நடைமுறை குறித்து யாழ்.செயலகத்தில் செயற்படும் மாவட்டத் தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

யுத்தத்தால் பாதிப்படைந்த வீடுகளுக்கான நஷ்டஈடு பெறுவது உட்பட பல்வேறு தேவைகளுக்காக இந்தப் பிரிப்பிதழ் பொதுமக்களுக்குத் தேவைப்படுகிறது. இதனைப் பெறச் செல்லும் மக்கள் அடிக்கடி மாறும் நடைமுறைகளால் சிரமப்படுவதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கேட்கப்பட்டபோது தற்போதைய நடைமுறை குறித்து தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, 2000ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளுக்கான வாக்காளர் இடாப்பின் பிரதியைப்பெற வேண்டுவோருக்கான விதிமுறை வருமாறு:-

தேவைப்படும் பிரதிக்குரிய ஆண்டினையும், தேவைக்கான காரணத்தையும் குறிப்பிட்டு, கிராம அலுவலரால் சிபாரிசு செய்யப்பட்ட கடிதத்தைப் பிரதேச செயலர்மூலம் உறுதிப்படுத்தி, அக்கடிதத்துடன் 40 ரூபாவைத் தேர்தல் அலுவலகத்தில் செலுத்தினால் பிரிப்பிதழைப் பெறமுடியும்.

அரச திணைக்களங்களில் பணியாற்றுவோர் பிரதேச செயலருக்குப் பதிலாகத் தாம் கடமையாற்றும் திணைக்களத்தின் தலைவரிடமும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

இதேவேளை, 2001ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரிப்பிதழ் பெறவிரும்புவோர் தேசிய அடையாள அட்டை மூலமோ அல்லது வேறு முறையிலோ தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி 40 ரூபா பணத்தையும் செலுத்தினால் பிரிப்பிதழைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10-75)

## இலங்கை வங்கியின் வடபிராந்திய காரியாலயம் ஜனவரியில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,நவ.13

இலங்கை வங்கியின் வடபிராந்தியக் காரியாலயம் அடுத்த வருடம் ஜனவரி மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக புதிதாகப் பதவியேற்றுள்ள சுபாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'இதுவரைகாலமும் கொழும்பில் இயங்கிவந்த இலங்கை வங்கியின் வடபிராந்திய காரியாலயத்தை இப்போது யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதற்கான அடிப்படை வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன. மேலும் சில வேலைகள் பூர்த்தியடைந்ததும் அடுத்த வருடம் ஜனவரி மாத நடுப்பகுதியில் காரியாலயம் இங்கு திறந்துவைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்து துரிதமாகவும் முழுமையாகவும் எமது சேவையை வட பிராந்திய காரியாலயம் இங்கு திறக்கப்படுவதன்மூலம் வழங்கமுடியும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் இரண்டாவது கிளை முழுமையாகக் கணனிமயப்படுத்தப்படவுள்ளது. இதனையடுத்து, பருத்தித்துறை, நெல்லியடி, மானிப்பாய், சுன்னாகம், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள கிளைகளும் படிப்படியாகக் கணனிமயப்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-8)

## முஸ்லிம்களின் நலன்பேண வடக்கு - கிழக்கில் குழு

### அமைக்கப் பிரதமர் பணிப்பு

கொழும்பு,நவ.13

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களின் பாதுகாப்பைக் கவனிப்பதற்கென உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பணிப்பின்பேரிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சட்ட அமுலாக்கம், சமுகங்களுக்கிடையில் சுமுகமான உறவை ஏற்படுத்தல், அப்பகுதி முஸ்லிம் மக்களின் பிரதான நலன்களைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் இந்தக் குழுவினர் ஈடுபட்டிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான இந்தக் குழுவில் பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா, பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமால் குணதிலக ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (ஓ-4)

## தப்பிய கைதிக்கு கடும் தண்டனை!

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பிச்சென்று, மீண்டும் கைதுசெய்யப்பட்ட கைதிக்கு மூன்றாண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று உள்ளக விசாரணைகளை மேற்கொண்டார். அதனையடுத்து அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரவீந்திரன் என்ற அந்தக் கைதிக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(ஓ-9)

# எழுத்தாளர்களைக் கௌரவிப்பதுடன் எழுத்துருக்களைப் படிக்கவும் வேண்டும்!

## நூல் வெளியீட்டு நிகழ்வில் மேயர் உரை

யாழ்ப்பாணம்,நவ.13

எழுத்தாளர்களைக் கௌரவிப்பதுடன் நின்றுவிடாது அவர்களது எழுத்துருவாக்கங்களை அனைவரும் படிப்பதனூடாக அவர்களது ஆத்ம ஆசைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.மாவட்ட இலக்கிய வட்டத்தினால் நடத்தப்பட்ட 10 நூல்களின் அறிமுகவிழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

'எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்கள். அவர்களின் முயற்சியே தமிழின் வளர்ச்சிக்குக் காரணமாகின்றது.

'எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் பெரும் பணியை இன்று யாழ்.இலக்கிய வட்டம் செய்து வருகின்றது. இந்தச் செயல் மூலம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன் எழுத்தாளர்களும் பற்றுடன் எமது மொழிக்காக மேன்மேலும் எழுத்துருவாக்கங்களை வழங்க வழியேற்படுகிறது.

'நூலகங்கள் எழுத்துருவாக்கங்களைப் பெற்று தமது பகுதி மக்களுக்கு நன்மை பெறச்செய்தல் அவசியம். இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நூலகங்கள் செயற்படுவதற்கு ஒழுங்குசெய்யப்படும்' என்றார் மாநகர முதல்வர்.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

'தமிழ் அனைத்துத் தமிழனுக்கும் சொந்தமானது. உயிரினும் மேலான தமிழ் இன்று தேவைக்காக மட்டும் பயன்படுத்தும் ஒன்றாக மாறி வருவது கவலைக்குரியது. யாழ்.பல்கலைக்கழகத்தினை எடுத்துக்கொண்டால் தமிழ் சார்ந்த விடயங்களில் தமிழ்த் துறையினர் மட்டுமே பங்குகொள்கின்றார்களே தவிர ஏனைய துறையினர் அதில் பங்குபற்றுவதில்லை. தாம் பேசும் தமிழை கௌரவிக்கவேண்டிய அவசியத்தினைப் பலரும் மறந்து விடுகின்றனர்.

'பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் மேடையில் அமர்ந்து கௌரவமாக நிகழ்வுகளில் கலந்துகொள்ள விரும்புகிறார்களே தவிர நிகழ்வில் இடம்பெறும் விடயங்களைப் பார்வையிட வருவதில்லை. அதனைக் கௌரவக் குறைவாகக் கருதுகின்றனர்.

'இந்த நிலைமை மாறவேண்டும். தமிழின் வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபடவேண்டும்' என்றார் அவர். (ஓ-12)

## தவறணை அருகில் கிடந்த சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

வடமராட்சி,நவ.13

கள்ளுத் தவறணைக்கு அருகில் இறந்து கிடக்கக் காணப்பட்ட வயோதிபரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

புலோலி கூவில் கள்ளுத் தவறணைக்கு அருகில் இறந்து கிடக்கக் காணப்பட்ட பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் என்ற நபரின் மரண விசாரணையை பருத்தித்துறை பதில் நீதிவான் என்.துங்கராசா நடத்தினார்.

விசாரணையின்போது இறந்தவரின் மனைவி உட்பட வேறு சிலரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து கிருமிநாசினியால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஓ-173)

**நாளை**

ஐப்பசி 28
வியாழக்கிழமை
(14.11.2002)
திதி : தசமி
முன்னிரவு 10.04 வரை.
நட்சத்திரம்: சதயம்
காலை 6.20 வரை
சுபநேரம் : 7.37 - 9.07
ராகுகாலம்: 1.37 - 3.07
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இருள் நிறைந்த பாதையை எண்ணினால் அச்சமாக இருக்கும். ஆனால், அதில் நடக்கத் தொடங்கிவிட்டாலோ அச்சம் அகன்றுவிடும். அதைப்போன்றதே வாழ்க்கைப் பயணமும்.

## பருத்தித்துறையில் கைதான மாணவனுக்கு பிணை அனுமதி

வடமராட்சி,நவ.13

பருத்தித்துறையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற பேரணியின்போது நிகழ்ந்த அசம்பாவிதங்கள் தொடர்பாகக் கடந்த 3ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் பாலசோதி என்ற மாணவன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இம்மாணவன் பருத்தித்துறை நீதிவான் ஆபிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இம்மாணவன் நீதிவான் முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை ஐயாயிரம் ரூபா காசுப்பிணையிலும் 10ஆயிரம் ரூபா இரு ஆள்பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

இம்மாணவனை பொலீஸார் கைதுசெய்ய முற்பட்டபோது பொலீஸாரின் ஜீப் மீது மோட்டார் சைக்கிளால் மோதி ஜீப்புக்கு சேதம் விளைவித்ததாக மற்றுமோர் குற்றச்சாட்டு மாணவன் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டின் பேரில் வாகன அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை ஓட்டிய குற்றச்சாட்டின்பேரில் ஆயிரத்து 250 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் இக் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை முடியும்வரை மோட்டார் சைக்கிளை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு பணித்தார். (ஓ-173-117)

# வை.எம்.சி.ஏ. நடத்திய போட்டிகளில் வென்றோர்

யாழ்ப்பாணம்,நவ.13

அண்மையில் யாழ். வை.எம்.சி. ஏயினால் நடத்தப்பட்ட கரம், சதுரங்கம் மற்றும் பட்மின்ரன் ஆகிய சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கரம்**

ஒற்றையர் ஆட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

12 வயது ஆண்கள்: டி.ருசியந்தன், என்.கமலரூபன்.

15 வயது ஆண்கள்: ஆர்.நிதர்சன், ஆர்.நிஷாந்தன்.

17 வயது ஆண்கள்: ஏ.பீற்றர் ரஜீவன், கே.சுஜீவன்.

17 வயது பெண்கள்: ஆர்.கஜதர்சினி, எஸ்.வித்தியாரணி.

இரட்டையர் ஆட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற ஜோடிகளின் விவரம் வருமாறு:-

12 வயது ஆண்கள்: என்.கமலரூபன் - டி.ருசியந்தன், எம்.ஆகாஷன் - எம்.ஹரிப்பிரவீண்.

15 வயது ஆண்கள்: ஆர்.நிதர்சன் - ஆர்.நிஷாந்தன், என்.கமலரூபன் - என்.கமலநாதன்.

17 வயது பெண்கள்: எஸ்.காஞ்சனா - ஆர்.கஜதர்சினி, ஏ.சாம்பவி - எஸ்.வித்தியாரணி.

**சதுரங்கம்**

*ஒற்றையர் ஆட்டங்கள்:*

12 வயது ஆண்கள்: பி.கெனத் ஜெற்றோ, என்.கமலரூபன்.

15 வயது ஆண்: எம்.துவாரகீசன், என்.கமலநாதன்.

**பற்மின்ரன்**

*ஒற்றையர் ஆட்டங்கள்:*

12 வயது ஆண்கள், டி.ருசியந்தன், எல்.ரகுவரன்.

17 வயது ஆண்கள்: ஏ.பிரதீபன், பீற்றர் ரஜீவன்.

15 வயது ஆண்கள்: றெமின்சன், ஜோன்டிலோசன்.

19 வயது ஆண்கள் - வி.தயாளரூபன், எஸ்.விமலகாந்.

17 வயது பெண்கள்: குவன்சியா, அனிஸ்ரா.

*இரட்டையர் ஆட்டங்கள்:*

12 வயது ஆண்கள்: ரகுவரன்-ருசியந்தன், ஏ.வனோஜன் - எஸ்.சஜீவன்.

15 வயது ஆண்கள்: ஆர்.நிதர்சன் - ஆர்.நிஷாந்தன், ஏ.கலைச்செல்வன் - ரெமின்சன்.


17 வயது ஆண்கள்: ஆர்.பிரதீபன் - எஸ்.தனுஸ்சாந், ஆர்.கமலநேசன் - பீற்றர் ரஜீவன்.

17 வயது பெண்கள்: அனிஸ்ரா - குவான்சியா - எஸ்.வித்தியாரணி - எஸ்.கஜனி.

*17 வயது கலப்பு*
*இரட்டையர் ஆட்டம்:*

எஸ்.பிரதீபன்-குவன்சியா, எஸ்.கனிஸ்ரன்-அனிஸ்ரா. (ஒ-5)





'மைலோ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 16 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

இன்றைய போட்டியில் மோதும் யாழ்.மத்திய கல்லூரி அணிவீரர்களும் (முதல்படம்) மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிவீரர்களும் (இரண்டாவது படம்) தத்தமது கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் படங்களில் காணப்படுகின்றனர்.

# கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்கு அர்ஜுன போட்டியிடத் தீர்மானம்

"இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்கான தேர்தலில் நான் போட்டியிடவுள்ளேன்.

- இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார்.

"தற்போதுள்ள வீழ்ச்சியைத் தடுப்பதன்மூலம் கிரிக்கெட் துறைக்குப் பங்காற்ற வேண்டியது எனது கடமை.

"தற்போதைய நிலை தொடர்ந்தால் இன்னும் 3-4 வருடங்களில் பங்களாதேஷ் அணிகூட எம்மை தோற்கடித்துவிடும்." - இவ்வாறு அர்ஜுன ரணதுங்க கூறினார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தில் ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கலைக்கப்பட்டது. அதன் இடைக்கால நிர்வாகக் குழுவொன்றே கிரிக்கெட் நிர்வாகத்தைக் கையாள்கின்றது.

இச்சபைக்கு அடுத்த வருடம் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலைவர் பதவிக்கான தேர்தலில்

**விளையாட்டு**

முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவிடம் அர்ஜுன கடும் போட்டியை எதிர்நோக்குவார் எனக் கருதப்படுகிறது.

இதேவேளை -

அரசியல்வாதிகள் தேசிய விளையாட்டுச் சம்மேளனங்களின் நிர்வாகப் பதவிகளை வகிப்பதைத் தடுப்பதற்கான சட்டமொன்றை கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதற்கு எதிராக அர்ஜுன ரணதுங்க தாக்கல் செய்த வழக்கு தற்போது உயர்நீதிமன்றில் விசாரிக்கப்படுகிறது. (ம)

## இந்தியா வெற்றி

கல்கத்தா,நவ.13

இந்திய மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகள் இடையேயான ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் இந்திய அணி 81 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இந்தியாவின் ராஜ்கோட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 5விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 191 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கங்குலியின் விக்கட்டை இழந்தது. இந்நிலையில் பார்வையாளர் குழப்பம் செய்ததினால் போட்டி இடைநிறுத்தப்பட்டு, நடைபெற்று முடிந்த ஓவர்களில் இரு அணிகளும் பெற்ற ஓட்ட வீதத்திற்கேற்ப 81 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றதாக ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டது. (ஒ-5)

# நட்சத்திரங்களின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட நான்கு பாடசாலை அணிகள் பங்கு பற்றும் 'நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப் போட்டி'' இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் ஸகந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

★ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

கடந்த 2ஆம் திகதி இப்போட்டி ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றிய ஐ.செல்வராசா மரணமடைந்தமையால் போட்டி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-86)

# பந்துல தலைமையிலான குழு பயிற்சியளிக்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம்,நவ.13

இலங்கைக் கிரிக்கெட் இயக்குநர்சபைப் பணிப்பாளர் பந்துல வர்ணபுர தலைமையில் நேற்று யாழ்ப்பாணம் வந்த பயிற்றுவிப்பாளர் குழு யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் லெவல் 1 கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிகளை நேற்றுமுதல் வழங்கிவருகின்றது.

இப்பயிற்றுவிப்பாளர் குழுவில் இலங்கை கிரிக்கெட் இயக்குநர் சபைப் பணிப்பாளர் பந்துல வர்ணபுர, பிமில்ரன், காமினி பெரேரா, எஸ். இலங்கரத்தினம், அனுசா சமரநாயக்க மற்றும் மஞ்சுள கருணாரத்ன ஆகியோர் அடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நாளைமறுதினம் வரை இக்குழுவினர் தங்கியிருப்பர்.

நாளைமறுதினம் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சிகளை இக்குழுவினர் வழங்கவுள்ளனர்.

நேற்று நடைபெற்ற லெவல் 1 கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பில் 25 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழும் ஏனையோருக்கு இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. (ஒ-5)

# ஆஸியை துடுப்பெடுத்தாட அழைத்தமை மிகப்பெரிய தவறு என்கிறார் ஹுசைன்

"ஆஸ்திரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பின் ஆஸ்திரேலிய அணியை முதலில் துடுபெடுத்தாடுமாறு கோரியமை எனது மிகப்பெரிய தவறு."

- இவ்வாறு இங்கிலாந்து அணித் தலைவர் நஸார் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

பிரிஸ்பேன் நகரிலுள்ள 'கெப்பா' மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி 384 ஓட்டங்களால் வென்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்டத்தில் 2 விக்கெட் இழப்பிற்கு 364 ஓட்டங்களைப் பெற்றது.

இதுகுறித்து பத்திரிகையொன்றுக்கு எழுதிய கட்டுரையொன்றில் ஹுசைன் தெரிவித்ததாவது:-

"ஆஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தமை மிகப்பெரிய தவறு.

"முதல்நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை 300 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி 5 அல்லது 6 விக்கெட்டுக்களை வீழ்த்திவிடலாம் என்று நம்பினேன்.

"இம்மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் இத்தீர்மானத்தை மேற்கொண்டேன்.

"எனினும், இது ஒரு சூதாட்டம் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால், துணிச்சலான தீர்மானத்தை மேற்கொள்வதால் பலன் கிட்டும் என்று அப்போது தோன்றியது.

"ஆனால், அதன்பின் நடந்த அனைத்து விடயங்களும் தவறான தீர்மானத்தின் தொடர்ச்சியாக அமைந்துவிட்டன.

"காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் சிமோன் ஜோன்ஸ் வெளியேற நேர்ந்தமை மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அணித் தலைவராகப் பதவியேற்ற பின் நான் அனுபவித்த மோசமான நாள் இப்போட்டியின் முதல் நாளாகும்'' - இவ்வாறு நஸார் ஹுசைன் தெரிவித்தார்.

ஆனால், நஸார் ஹுசைனின் தீர்மானம் சரியானதே என ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

"நாணயச் சுழற்சியில் வென்றால் முதலில் பந்து வீசுவதற்கே ஆஸ்திரேலிய அணியும் தீர்மானித்திருந்தது" - இவ்வாறு மெக்ராத் தெரிவித்தார்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம் பிரவேசம் 30 - 12 - 1947



விண்ணரங்க பிரவேசம் 24 - 11 - 2001

**கந்தையா கமலராஜா**

ஆண்டொன்றென்ன ஆயிரமானாலும்
ஆறுமா எங்கள் துயர்?
நீண்ட நெடும் பயணம் போய்விட்டாய்
எம் உடன் பிறப்பே, நீயில்லாமல்
நித்தமும் உனை நினைந்து வாடுகிறோம்.

*128, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (10570)

*உன் பிரிவால் வாடும்:*
**உடன் பிறப்புகள்.**

**A/L கணக்கீடு**

தனியாகவோ, குழுவாகவோ
வீட்டிற்கு வந்து
விரிவான முறையில்
கணக்கீடு கற்பிக்கப்படும்.
தொடர்புகள்: **S.P.தயா.**
T.P.No.: 3193 (10569)

உ
சாமியே சரணம் ஐயப்பா!
**கோண்டாவில் கிழக்கு**
அருள்மிகு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்
**மண்டல மகர ஜோதிப் பெருவிழா**

ஐயப்பன் அடியார்களே!

எதிர்வரும் 17.11.2002 ஞாயிற்றுக்கிழமை காலை கன்னிமூல கணபதிக்கு கணபதி ஹோமம் - அபிஷேக ஆராதனை நிகழ்ந்து ஐயப்பன் பக்தர்களுக்கு புனித விரதமாலை அணிவித்து விரதம் ஆரம்பமாகும்.

- **17.11.2002 முதல் 14.01.2003 வரை**
  தினமும் மாலை 5 மணிக்கு விசேட அபிஷேகம்
  ஐயப்பனுக்கு விசேட பூஜை,
  18ஆம் படி பூஜை,
  விசேட நாமபஜனை நடைபெறும்.
- ஐயப்பன் விரதம் அனுஷ்டிக்க விரும்பும் பக்தர்கள் எமது ஆலயத்தில் மாலை அணிந்துகொள்ளலாம். இரு முடிகட்டி, படி ஏறி, நெய் அபிஷேகம் செய்யலாம்.
- மலைக்குப்போக இயலாத பக்தர்களுக்கு சகல ஒத்துழைப்புகளும் தரப்படும். காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.
- மலைக்குப் போகமுடியாத அடியார்களுக்காக அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தில் விரதகாலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஐயப்பன் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*சபரீச ஐயப்பன் ஆலயம்,*
*கோண்டாவில்.*

ஆலய குரு கி.அரிகரசுத சர்மாவும்
ஐயப்ப பக்தர்களும்.

சாமியே சரணம் ஐயப்பா! (10566)

# இரு குழுக்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள்.

★ அரசமைப்புச் சீர்திருத்தம்.

★ இன நல்லிணக்கம் மற்றும் நிலையான தீர்வுக்கான முயற்சிகள்.

- இந்த நான்கு விடயங்களையும் வலியுறுத்தி ஜனாதிபதி தெரிவித்ததாவது:-

எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் என்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பாக கடந்த ஓராண்டு காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பதற்றத்தைத் தணித்து, முன்னேற்றம் கண்டு வருவது திருப்தியளிக்கிறது.

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப் பேசப்படவேண்டும் என்ற வலியுறுத்தல் சம்பந்தமாக அரசு சிரத்தை எடுத்திருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. எனது வற்புறுத்தல் காரணமாகவே இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதை புலிகள் இயக்கம் தொடர்ந்து வலியுறுத்தாது என்று தோன்றுவதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

முக்கிய பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தி இணக்கத்துக்கு வந்த பின்னரும், ஆயுதங்களைக் கீழே வைத்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்கு வர புலிகள் இயக்கம் இணங்கிய பின்னருமே இடைக்கால நிர்வாக சபை அமைப்பது குறித்து ஆலோசிக்கப்படவேண்டும் என்று பொ.ஐ.முன்னணியும் ஏனைய பல தமிழ், முஸ்லிம கட்சிகளும் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை நானும் அங்கீகரிக்கின்றேன்.

மனித உரிமைகள் பற்றிய பிரச்சினை குறித்தும் நாம் கவனம் செலுத்துகின்றோம். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயதுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சிறுவர்களைப் படையில் சேர்த்தல், கப்பம் வாங்குதல், வடக்கு - கிழக்கில் முஸ்லிம், சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பலகட்சி ஜனநாயக்தை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் அந்த நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் மீறலை யார் செய்திருந்தாலும், அந்த மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகள் ஆராயப்படவேண்டும்.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரங்களில் பாதிக்கப்பட்டோர் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், அதன் பின்னர் நடைபெற்ற வன்செயல்கள் குறித்தும் நாம் கவனம் செலுத்தவேண்டும். போர் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து மோதல்களுக்கு வழிவகுத்த பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண தெளிவான நோக்கு இருக்க வேண்டும். அது தொடர்பான செயற்றிட்டம் ஒன்றும் இருக்க வேண்டுமென நான் எப்பொழுதும் வலியுறுத்தியிருக்கின்றேன்.

இந்தக்குறிக்கோளுக்காக, இன ஐக்கியத்துக்காகவும் நிரந்தர சமாதானத்துக்காகவும் தேசிய குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழுவில அரச, எதிர்க்கட்சிகளின், அரசசார்பற்ற பிரதான அமைப்புக்களின், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும்.

மோதல்களுக்கு வழிவகுத்த முக்கிய பிரச்சினைகளை அறிந்து கொள்ளுதல், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகியன அக்குழுவின் முக்கிய பணியாக இருக்க வேண்டும். வடக்கு - கிழக்கிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்களினதும் அவ்வாறே தமிழ் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த இக்குழு சிபாரிசுகளைத் தெரிவிக்கவேண்டும்.

நல்லாட்சிக்கான முறைகளை வகுப்பதற்கான தேசியக்குழு பரந்த அதிகாரத்துடன் பிரதமர் தலைமையில் அமைக்கப்படவேண்டும்.

இக்குழு, அரசியல தலைவர்களுடனும் சமூகத் தலைவர்களுடனும் மக்களுடனும் பரந்தளவில் ஆலோசனைகளை நடத்தவேண்டும். அதன் மூலம் நல்லாட்சிக்காக புதிதாக உருவாக்கப்படவேண்டிய ஆட்சி முறைக் கட்டமைப்பை அக்குழு சிபாரிசு செய்யவேண்டும்.

தேசிய ஐக்கியத்துக்கும் சமாதானத்துக்குமான ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும். இக்குழுவில் இடம்பெற நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் வெளியில் உள்ள கட்சிகளையும் மதத் தலைவர்களையும் சமூகப் பெரியார்களையும் நான் அழைக்கின்றேன்.

இலங்கையின் ஆட்சி முறையில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்கு அடிவேராக இருப்பது 1977 இல் உருவாக்கப்பட்ட அரசமைப்புத்தான் என்பது நமக்குத் தெரிந்ததே.

இந்த அரசமைப்பு அறிமுகப்படுத்திய தேர்தல் முறையே பலவீனமான அரசுகள் உருவாகக் காரணமாயிற்று.

1994 இல் 80 வீதத் தொகுதிகளில வென்று, ஜனாதிபதித் தேர்தலில் 63 வீத வாக்குகளைப் பெற்ற கட்சியால நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை ஆசனத்துடனேயே ஆட்சி அமைக்க முடிந்தது. ஆகவே இந்த அரசமைப்பு முற்றாக மாற்றப்பட வேண்டும்.

தேர்தல் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுடன் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டும்.

அதேவேளை, சிறுபான்மையினரின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதோடு, 1997 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் எனது முதலாவது அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பு நகல்களின் அடிப்படையில் பரந்தளவில் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள், பிராந்தியங்களுக்குப் பகிர்வு செய்யப்படுவதும் அதில் உள்ளடக்கப்படவேண்டும்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

அரசியல் பழிவாங்கல்களுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழு, சுயாதீன ஊடகவியல் ஆணைக் குழு என்பன அமைக்கப்படவேண்டும்.

- என்றார் ஜனாதிபதி. (ஐ-12)

## தசாக கிரகஞெக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

*5.11.2002 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி*

### திருமதி குகதாசக் குருக்கள் நாகலட்சுமி அம்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பித்து பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

விவரம்

**14.11.2002** வியாழன் பகல் 10.00 மணி பாஷான உத்தாபனம் தசாகம் (கல்லெடுப்பு)
**15.11.2002** வெள்ளி பகல் ஏகோதிட்டம் மாசியம்
**16.11.2002** சனி பகல் சவுண்டிகரணம் தானாதிகள்
**17.11.2002** ஞாயிறு பகல் (கிரகஞெக்ஞம்) சமாராதனை.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (10583)

கணவர், மக்கள், மருமக்கள்.

## துயர் பகிர்கின்றோம்

எங்கள் கல்லூரியின் சிரேஷ்டஆசிரியர்
**திரு.த.பரமேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### நாகலிங்கம் தம்பிமுத்து

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நலன்புரிக்கழகம்
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

(சி24860)

## VACANCIES

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned post upto 31.12.2002.

**FACULTY OF ENGINEERING**

Professor in Engineering (Civil/Electronic/Information Technology)

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs. 25,500 - 8x550 - 29, 900/- p.m |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/ Establishments, University of Jaffna , Sri Lanka, either in person or by sending a money order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23x30 cm. in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

***Note: Those who already applied to the above post in response to our advertisement dated 18.06.2002 need not to apply again.***

**Registrar;**
**University of Jaffna,**
**Sri Lanka.**
**12.11.2002**

(சி24672)


**ராஜா** யாழ்ப்பாணம்.

அஜித், (இருவேடங்களில்), மீனா நடித்த

**வில்லன்** (ரீலீஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30 } (புதிய நேரம்)
விசேட காட்சி: 9.30 }

**நாகம்ஸ்** சுன்னாகம்

குணால், மீனாக்ஷி, அனிதா, நம்பியார் நடித்த

**வருஷமெல்லாம் வசந்தம்** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்),
அடுத்த வெளியீடு: கலைஞரின் விளக்கம்

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், சுந்தியா, சிம்ரன், விவேக் நடித்த

**யூத்** (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)

**வெற்சாமி** இணுவில்

இன்று முதல்
விஜய் - சிம்ரன், மணிவண்ணன் நடிப்பில்

**துள்ளாத மனமும் துள்ளும்** (ரீலீஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



ஜனனம் 20 - 07 - 1973

மரணம் 14 - 10 - 2002

### திவாஜினி நல்லையா

**(சங்கானை மாவடி இந்து மகளிர் மன்றத் தலைவர்)**

மண்ணில் எனக்கொரு
மகளாய் மலர்ந்த
மாணிக்கமே!
மடிந்தாய் நீ என
ஏற்க மனம் மறுக்கிறதே
மகளே திவா!
மாயை உலகில் உன்
உடல்தான் உதிர்ந்ததம்மா
அழியா உன் ஆத்மா
அவன்றாள் சென்றேகியதே!

இன்று(13.11.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரதான வீதி, சங்கானை.* (10571)

திருமதி ந.புஸ்பவதி
(தாயார்)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சா.மேரி ஸ்ரெலா (புஷ்பா)**
அவர்களின் தந்தையார்

### அமரர் மே.மோசஸ்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*யா/சாவ.றோ.க.த.க.பாடசாலை,*
*சாவகச்சேரி.* (சி24859)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் பகுதி நேர விரிவுரையாளர் அ.உதயகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

### F.P.அந்தோனிப்பிள்ளை

அவர்கள் காலமானதால் துயரத்தில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினரோடு IIS, சமூகத்தினராகிய நாமும் பங்குகொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

*இயக்குநர், பயிற்சி இயக்குநர்,*
*விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள்,*
*மாணவர்கள்*
***IIS, யாழ்ப்பாணம்.***

(சி24861)

## மரண அறிவித்தல்கள்

### F.P.அந்தோனிப்பிள்ளை (சிறில்)

*(B.Sc. Dip in Edu. S.L.E.S. இளைப்பாறிய அதிபர்)*

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பனார்ன்டோபோல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் தங்கமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பனார்ன்டோபோல் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நல்லையா - குமாரத்தி ஆகியோரின் மருமகனும், சாந்தமரினா, வசந்தமரினா (ஜேர்மனி), சாந்தகுமார் (ஹொலண்ட்), ஜெயக்குமார் (ஹொலண்ட்), சுந்திரகுமார் (பெல்ஜியம்), சூரியகுமார் (ஹொலண்ட்), ஜீவகுமார் (ஹொலண்ட்), உதயகுமார் (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், I.T Park, பகுதி நேர விரிவுரையாளர், IIS), ராஜ்குமார் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலன் பூபாலசிங்கம் (ஆசிரியர்), பவளசிங்கம் (ஜேர்மனி), பவானி செல்வி (ஹொலண்ட்), மைதிலி (ஹொலண்ட்), குட்டி (ஹொலண்ட்), அனி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோய், யூலி, அஜோய், யோகானா, கௌதும், பிரசன்னா, பல்லவி, றோஷானி, மத்தியூ ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*முதலாம் குறுக்குத்தெரு,*
*நாவாந்துறை*
*யாழ்ப்பாணம்.* (10579)

தகவல்:
சாந்தகுமார் (மகன்)

### செல்வன் கென்றி றெஸ்லி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் கென்றி றெஸ்லி நேற்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம் கென்றி (தும்பித்துறை - சாரதி இ.போ.ச. காரைநகர்) - வசுனா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (12.11.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பற்றிமா வீதி*
*(தியான இல்லம் அருகில்)*
*பண்டத்தரிப்பு.* (10587)

தகவல்
தே.யூரிசன் (அண்ணன்)

## ஜனாதிபதி செயலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார். தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதை தெரிவித்து 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தொடர்ந்து முப்படையினரது அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

சபா மண்டபத்தில் அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் பெருமளவில் சமுகமளித்திருந்தனர். பிரதமருக்கு என ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் பிரதமர் இவ் வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இ.தொ.கா. பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகம தொண்டமான், இரா.யோகராஜன் எம்.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் எம்.பி., புளொட் எம்.பியான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் அமைசசர் (ஈ.பி.டி.பி.) டக்ளஸ் தேவானந்தா, எம்எல்ஏ.எம்ஹிஸ்புல்லாஹ் (ஐ.தே.மு.) ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ-9-12)

## மாவீரர்நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியாக ஆரம்பிக்குமாறு கூறியவர் ஜேர்மன் நாட்டுப் பெண்மணி ஒருவரே. அதனைத் தொடர்ந்து தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன ஆசிரியர் ஒருவரும் இங்கு வருகை தந்து எமக்கு நிதியுதவி செய்தார். தற்போது எமது மக்களே முன்னின்று யாழ்.குடாநாட்டிலுள்ள நான்கு துயிலும் இல்லங்களையும் புனரமைத்து வருகின்றனர்.

மாவீரர்நாளை எழுச்சியுடன் எதிர்கொள்ளும் வகையில் தமிழீழ தேசமெங்கும் புனிதப்படுத்தப்பட வேண்டும்.

நவம்பர் 25 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 27 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் தமிழீழ மாவீரர் எழுச்சி நாள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னதாகவே மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்துள்ள இடங்கள், வீடுகள், வீதிகள், பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் அலுவலகங்கள் அனைத்துமே புனிதப்படுத்தப்பட்டுவிடவேண்டும். மாவீரர்நாள் நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள் சிவப்பு, மஞ்சள் வர்ணங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

### கேளிக்கைகளைத் தவிருங்கள்

எழுச்சி ஆரம்ப நாளன்று காலை 8 மணிக்கு தேசியக் கொடியேற்றலைத தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகும். அனைத்து மக்களும் அலங்கரிப்பு மற்றும் வீரவணக்க நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதுடன் தேவையற்ற கேளிக்கைகள் தவிர்க்கப்படவும் வேண்டும். வீதிகள் எங்கும் விடுதலைக் கீதங்கள் ஒலிக்கப்படும். யாழ். குடாநாடெங்கும் மரநடுகை, சிரமதானம், அலங்கரிப்பு, வீரவணக்க நிகழ்ச்சிகள், கலை நிகழ்வுகள் மற்றும் சமூக சேவைப் பணிகளில் பொதுமக்கள் ஈடுபடுவர்.

தமிழர் தாயகத்தின் மிகப்பெரிய நிகழ்வான மாவீரர் எழுச்சிநாளின் இறுதி நாளன்று மாலை 6.05 மணிக்கு தேசியத் தலைவரின் மாவீரர் நினைவுரையுடன் நிறைவுபெறும். உடனடியாகவே அனைத்து ஆலயங்களிலும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பபடும். இந்நேரம் உயிர்க்காப்புப் பணியில் ஈடுபடும் வாகனங்கள் தவிர்ந்த அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படும். தொடர்ந்து, மக்கள் அந்தந்த இடங்களில் எழுந்து நின்று, மாவீரர்களை நினைவில் நிறுத்தி ஒரு மணித்துளி நேரம் அகவணக்கம் செலுத்துவர். மாலை 6.07 மணிக்கு துயிலும் இல்லங்கள், பொது இடங்கள் அலுவலகங்கள், விளையாட்டு இடங்கள், தொழில் நிறுவனங்கள் போன்ற இடங்களில் ஈகச்சுடர் ஏற்றப்படும். இதன்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும்.

### ரயர்களை எரிக்காதீர்!

இந்த வேளையில் ஈகச்சுடரின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாத வகையில் வீதிகளில் ரயர்களை எரிப்பதும், வேறு ஒலிகளை ஏற்படுத்துவதும் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும் - என்று தெரிவித்தார் இளம்பரிதி.

இதேவேளை -

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள துயிலும் இல்லங்களில் மாவீரர் கல்லறைகளைக் கொண்டுள்ள - யாழ். குடாநாட்டைச் சேர்ந்த - மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்கு வன்னிக்குச் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சம்பந்தப்பட்டவர்களை அருகிலுள்ள புலிகளின் கோட்ட செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் இப்புள்ளிவிவரங்களைத் திரட்டியுள்ளனர்.

இந்தப் பாதுகாப்பு வலயப் பகுதிகள் யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள கடற்படை மற்றும் தரைப்படைகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நீலங்காடு (எலரா கடற்படை), ஊருண்டி (கஞ்சதேவா கடற்படை), வேலணை (வெலிசுமண கடற் படை), மண்டைதீவு (512 ஆவது பிரிகேட்), ஞானம்ஸ் விடுதி (512 ஆவது பிரிகேட்), கிழக்கு அரியாலை (512, 514 ஆவது பிரிகேட்டுகள்), தனங்களப்பு (521 ஆவது பிரிகேட்), எழுதுமட்டுவாழ் (55 ஆவது பிரிகேட்), அம்பன், பல்லப்பை (524 ஆவது பிரிகேட்), பருத்தித்துறை (524 ஆவது பிரிகேட்), வல்வெட்டித்துறை (524 ஆவது பிரிகேட்), தெல்லிப்பழை (கடற்படை மற்றும் தரைப்படை), அராலி ஆகிய 14 இடங்களை படையினர் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இதனுள் 67 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 145 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள வலயம் அடக்கப்படுகிறது.

சுமார் 42 ஆயிரத்து 260 ஏக்கர் விவசாய நிலம் இதனுள் முடக்கப்பட்ட காரணத்தால் சுமார் 16 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

40 தொழிற்சாலைகள் இவ்வலயத்தினுள் முடக்கப்பட்டுள்ளமையினால் சுமார் 1700 தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 82 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பயனற்று இருப்பதால் 4 ஆயிரத்து 436 மீனவக்குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இத்தகவல்களை யாழ். மாவட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பொதுமக்களின் சுமார் 400 வீடுகளிலிருந்து படையினர் இன்னமும் வெளியேறவில்லை.

மேலும் 290 பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் இருந்தும் படையினர் வெளியேறவில்லை என்றும் அப்புள்ளி விவரங்களின் மூலம் தெரியவருகிறது.

(ஐ-9)

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவடைந்தவுடன் தேசிய முக்கியதுவம் வாய்ந்த பிரச்சினை ஒன்று தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்க ஜே.வி.பி. எம்.பி.விமல் வீரவன்ஸவிற்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அது அமையவில்லை என்று சுட்டிக்காட்டிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் பெரும் ஆரவாரம் செய்தனர்.

அந்த அறிக்கையை சமர்ப்பிக்க பிரதமர் அனுமதி வழங்கியிருக்கிறார் என்று சபாநாயகர் கூறிய போதிலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அடுத்து ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் சபை முதல்வர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவும் பிரச்சினையில் தலையிட்டதை அடுத்து விமல் வீரவன்ஸ எம்.பிக்கு அறிக்கையை வாசிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அவர் தனது அறிக்கையை வாசிக்கும் போது சபையில் மீண்டும் சூடு பிடித்தது.

அவர் தனது அறிக்கையில், உலகப் பயங்கரவாதியான பிரபாகரனின் பிரதிநிதிகளுக்கு அரசு உலக அங்கீகாரம் தேடிக் கொடுக்கிறது. 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிகக்கப்பட்ட ஒருவரின் அமைப்புக்கு இலங்கை அரசு அங்கீகாரம் கொடுக்கிறது என்று கூறினார்.

இது சபையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. விமல் வீரவன்ஸவின் பேச்சை அமைச்சர் மகேஸ்வரன் கடுமையாக எதிர்த்தார். தனது கண்டனத்தை வெளிக்காட்டினார். அவருக்குத் துணையாக யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. என்ரவிராஜ் நின்றார். பல சந்தர்ப்பங்களில் இவர்கள இருவரும் நிலையியல் கட்டளைகள் தொடர்பான பிரச்சினைகளை எழுப்பினர்.

இப்பிரச்சினைகளினால் சபை முதலில் 10.35 மணியளவில் 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியபோதே அமைச்சர் மகேஸ்வரனையும் பிரேமரத்ன எம்.பியையும் வெளியேறுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார். ஒத்திவைக்கப்பட்ட சபை மீண்டும் கூடியபோது ஒருசில நிமிடங்களுக்குப் பின் பிறேமரத்ன எம்.பி.சபையில் காணப்பட்டார். அமைச்சர் மகேஸ்வரன் பிற்பகலில் சபை விவாதத்தில் கலந்துகொண்டார்.

சபை அமளிதுமளி பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொனனம்பலம், கிருஷ்ணபிள்ளை, துரைரததினசிங்கம் ஆகியோர் சபையில் இருந்தனர்.

(ஐ-12)

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் ஆகியோரும் பேரணியில் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர். கிளிநொச்சி அரச செயலகத்தை பேரணி சென்றடைந்ததும் அங்கு கண்டனக்கூட்டம் நடந்தது. வெகுஜன அமைப்புகளின் தலைவர் பொன்.விநாயகமூர்த்தி தலைமையில் நடந்த கூட்டத்தில் பலர் உரையாற்றினர்.

பிரதமர், ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதமர், நோர்வே பிரதமர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியோருக்கான மகஜர்கள் அங்கு கையளிக்கப்பட்டன.

(ஐ-164)


### மணியின் மனமகிழ்ந்த வாழ்த்துக்கள்



எமது நிறுவனத்தின் அளவையியல் ஆசிரியரும்
யா/இந்து மகளிர் கல்லூரி ஆசிரியரும்
என் அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய

**உயர்திரு. ப.கமலதாசன்**
B.A. (Cey), Spl. TRD.com, Dip. in. Mgt (O.U.S.L.)

அவர்கள் எதிர்வரும் 16.11.2002இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் கொழும்பு றோயல் கல்லூரியில் நடத்தப்படும் பட்டமளிப்பு விழாவில் Dip. in. Mgt. எனும் பட்டம் பெறுவதையிட்டு மகிழ்வடைந்து வாழ்த்தும்

இயக்குநர்,
மணி கல்வி நிறுவனம், வேலணை
T.P. 0777 - 148532 (10582)

ஆசிரிய நண்பன்
த.தனேந்திரன்


### துயர் பகிர்கின்றோம்



அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்து
அன்புத் தம்பியாய்,
அன்பு அண்ணனாய்,
அன்புத் தந்தையாய் மிளிர்ந்த
எமது மதிப்பிற்குரிய

**கனகரத்தினம் சோதிராஜா (சோதி)**

அவர்கள் காலமாகியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகிறோம். அவரது பிரிவில் துயருறுவோரின் துயரில் நாமும் பங்கேற்று மறைந்த சோதி அவர்களது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

க.மகேந்திரராஜா
(ஆசிரியர்)
(10515)

### மரண அறிவித்தல்

**கனகரத்தினம் சோதிராஜா (சோதி)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமான கனகரத்தினம் சோதிராஜா (சோதி) 7.11.2002 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - திருமதி கண்மணி கனகரத்தினம் (கனடா) தம்பதிகளின் புதல்வரும் உமாநிதியின் அன்புக் கணவரும் நிராஜ் (பிரான்ஸ்), நிலுஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராஜா (ஆசிரியர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை), திருமதி பாக்கியவதி கனகேஸ்வரன் (பிரான்ஸ்), தவராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் டர்ஷா, விதுர்ஷா ஆகியோரின் சித்தப்பாவும் சஜீவன் (பிரான்ஸ்), கபிலன் (பிரான்ஸ்), அனு (பிரான்ஸ்) ஆகியோரின் சின்னமாமாவும் காலஞ்சென்ற வே.தருடராசா - திருமதி ந.இராஜேஸ்வரி ஆகியோரின் மருமகனும் தர்மசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலன், குணசீலன் (பிரான்ஸ்), திருமதி ப.தாரணி, திருமதி த.தர்மினி (கனடா), மயூரினி கனகேஸ்வரன் (பிரான்ஸ்), திருமதி ந.மகேந்திரராஜா (ஆசிரியை, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2002) புதன்கிழமை பி.ப. 2மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"மகேந்திரபதி"*
*கே.கே.எஸ். றோட்,*
*இணுவில்.*

தகவல்:
மகேந்திரராஜா மாஸ்ரர்
விதுஜா சுப்பமாக்கட்,
இணுவில் சந்தி.

(10616)


### பக்கவடிவமைப்பாளர் தேவை
(Part time / Full time)

★ Pagemaker, Coreldraw வில் குறைந்தது ஒரு வருட அனுபவம் தேவை.
★ இரவு நேர வேலை.
★ ஆண்கள் மட்டும்.
★ சம்பளம் 7,500/= இற்கு மேல்.

தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

'உதயன்' பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/24840)

We need a dynamic
COMPUTER HARDWARE TECHNICIAN
Walk in interview

Interview will be held at 3.00 pm Friday 15th November 2002 at our office present with complete CV.
Salary negotiable

The Director,
STP Computer World (Pvt.) Limited
54A, Palaly Road, Kandarmadam, Jaffna T.P:021-2222674, e.mail: stpedu@sltnet.lk

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்நகர்.
A/L 2004
உயிரியல்
உயிர்ப் பல்வகைமை
BY: ஞானேந்திரன்
ஆரம்பம்: 14.11.2002
Thu 4.00 p.m.
(10553)

முக்கிய அறிவித்தல்
வடமராட்சியின் மிக முன்னணி பௌதிகவியல் ஆசிரியர் தற்போது யாழ்.நகரில்
A/L 2004
PHYSICS
By: சந்திரப்பிரகாஸ்
ஆரம்பம்: 16.11.2002
Sat - 9-10 a.m.
NEW SCIENCE CENTRE
வெலிங்டன் சந்தி அருகில்
(10555)

விளையாட்டு - விளையாட்டு - விளையாட்டு - விளையாட்டு - விளையாட்டு - விளையாட்டு - விளையாட்டு

வீரர்களே! உங்கள் தேவையை நாம் அறிவோம்
☆ உதைபந்தாட்ட உபகரணங்கள் ☆ CRICKET உபகரணங்கள்
☆ பட்மின்ரன், TABLE ரெனிஸ் ரக்கற்ஸ் ☆ வெற்றிக்கிண்ணங்கள்
☆ சகலவிதமான விளையாட்டுப் பாதணிகள் ☆ விளையாட்டு சீருடைகள்
☆ மெய்வல்லுநர் விளையாட்டு உபகரணங்கள்
என்பனவற்றிக்கு இன்றே விரையுங்கள்
யாழ்.நகரில்
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
உயர்ந்த தரம்!
குறைந்த விலை!
இல. 76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
NOTE:- பாடசாலைகள், கழகங்கள், பொதுநிறுவனங்கள் என்பனவற்றிக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்
(சி24819)
ஜொனெக்ஸ் - ஜொனெக்ஸ் - ஜொனெக்ஸ் - ஜொனெக்ஸ் - ஜொனெக்ஸ்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.